Registered as a news paper.
பக்கங்கள் பன்னிரண்டு
விலை ரூபா 7.00

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

Thirumurugan Com Net
திருமுருகன் கொம் நெற்
WESTERN UNION Money Transfer
FedEx Express
Inland & I.D.D Calls, Internet-Browsing & E-mail, Fax, Photo Copy, Computer typing & Printing, Designing-Cards, Laminating, CD-Writing, Binding, Parcel Services, Bus-Van-Flight Ticketing Services, & Computer-Hand phone Accessories,
259, K.K.S.Road Jaffna. Tel - 021 222 3958 Fax - 021 222 7836
E.mail thirumuruglan@lycosmall.com
46, Adiyapatham Road, thirunelvely, Jaffna. Tel - 021 222 7560 Fax - 021 222 7310

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 மார்கழி – 16 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 துல்ஹஃதா 18 (31.12.2004) வெள்ளிக்கிழமை இதழ்:92

# அவல நிலையிலிருந்து மக்களை மீட்க

# சர்வதேச அமைப்புகள் உதவ வேண்டும்!

## கிளிநொச்சி சந்திப்பில் தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி உதவிகளை வழங்குவதற்கு சர்வதேச தொண்டர் அமைப்புக்களும் நாடுகளும் உதவுவதற்கு முன்வரவேண்டுமென தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கேட்டுக் கொண்டார்.

நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்ற உதவி வழங்கும் சர்வதேச நிறுவனங்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடற்கொந்தளிப்புக் காரணமாக எமது கட்டுப்பாட்டு (12 ஆம் பக்கம் பார்க்க)



### மீண்டும் கடற்கொந்தளிப்பு

## அபாய எச்சரிக்கையால் பொதுமக்கள் அச்சம்!

(யாழ்ப்பாணம்)

நாட்டில் மீண்டும் கடற்கொந்தளிப்பு ஏற்படக்கூடும் என்றும், ஒரு கிலோமீற்றர் தூரத்துக்கு அப்பால் பொதுமக்களைப் பாதுகாப்பான இடத்துக்குச் செல்லுமாறும் நேற்று விடுக்கப்பட்ட எச்சரிக்கையை அடுத்து பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

நேற்று நண்பகல் அளவில், குடாநாட்டிலும் திருகோணமலை, அம்பாறை போன்ற பகுதிகளிலும் இந்த அழைப்பு விடுக்கப்பட்டது.

இதையடுத்து கரையோரப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றனர்.

இதேவேளை - (12 ஆம் பக்கம் பார்க்க)

## பார்வையிடுவதற்கு வந்த பிரதமரை பாதிக்கப்பட்ட மக்கள் விரட்டினர்!

### வடமராட்சியில் நேற்று சம்பவம்

(வடமராட்சி)

கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்டு புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் தங்கியுள்ள மக்களைப் பார்வையிடச்சென்ற பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் நான்கு அமைச்சர்கள் அந்த மக்களின் கடும் எதிர்ப்பை அடுத்து அங்கிருந்து வெளியேறிச் சென்றனர்.

நேற்றுக்காலை கொழும்பிலிருந்து விமானமூலம் பலாலிக்கு வந்த பிரதமரும், நான்கு அமைச்சர்களும் பிற்பகல் 2 மணியளவில் படையினரின் பலத்த பாதுகாப்பின் மத்தியில் கப்பூது கலிகைச் சந்தியின் வீதியூடாகப் புலோலி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் தங்கியுள்ள மக்களைச் சென்று பார்வையிட்டனர்.

தாம் பாதிக்கப்பட்டிருக்கும் வேளையில் தமக்கு வேண்டிய உதவிகளை வழங்காத அரச குழுவினர், தாம் பாதிக்கப்பட்ட உடனும் தம்மைப் பார்க்க வராத நிலையில், பாதிக்கப்பட்ட உடன் விடுதலைப் புலி (12 ஆம் பக்கம் பார்க்க)

## 13407 பேர் வட_கிழக்கில் பூகம்பத்தால் உயிரிழப்பு!

(வவுனியா)

வடகிழக்கில் இறந்தவர்களின் தொகை 13407 எனத் தெரிவிக்கப்படுகிறது. பிந்திய கணக்கெடுப்பின்படி தற்போதய நிலைமை வருமாறு அம்பாறை 9254, மட்டக்களப்பு 1578, முல்லைத்தீவு 1055திருகோணமலை 855, யாழ்ப்பாணம்(வடமராட்சி கிழக்கு) 665, பேர் உயிரிழந்தனர். மேற்படி மாவட்டங்கள் அனைத்திலும் தேடுதல் நடவடிக்கை தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

அம்பாறை 1251 முல்லைத்தீவு 2750 மட்டக்களப்பு 692, யாழ்ப்பாணம் 59, திருகோணமலை100 பேரும் காணாமற் போயுள்ளனர்.

முல்லைத்தீவு 1386, யாழ்ப்பாணம் 1218, மட்டக்களப்பு 345 பேர் காயமடைந்தனர்.அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் விபரம் தெரியவில்லை.

இடம்பெயர்ந்தவர்களின் விபரம் மட்டக்களப்பு மாவட்டம் 2,08,803பேர், முல்லைத்தீவு 25,255 பேர் திருகோணமலை 97,407பேர் யாழ்ப்பாணம் 61,839 பேர் அம்பாறை 1,91,163.

நலன்புரி நிலையங்கள் மட்டக் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பியினரின் வருகையை எதிர்த்து செயலகம் முன் மறியற் போராட்டம்!

(யாழ்ப்பாணம்)

வடக்கில் சுனாமியின் பேரழிவினால் பாதிக்கப்பட்ட மக்களை பார்வையிடுவதற்கு வருகைதந்த ஜே.வி.பியினருக்கு எதிர்ப்பு தெரிவித்து யாழ்.செயலகத்தின் முன்பாக சர்வதேச மாணவர் வேரவையினர் மற்றும் பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தென்னிலங்கையில் இனவாதம் பேசிக்கொண்டும் தமிழர்களுக்கு சுயநிர்ணயஉரிமை ஒன்று இல்லை என்று நாடாளுமன்றத்தில் முழக்கமிடும் ஜே.வி.பி துரோகிகள் புனித பூமியான தமிழர் பூமிக்கு ஏன் வருகிறார்கள்.இவர்களின் வருகையை ஒருபோதும் தமிழ்மக்கள் ஏற்கமாட்டார்கள்.

பாதிக்கப்பட்ட எமது மக்களை பார்வையிடுவதற்காக வருகைதந்து ஜே.வி.பியினர் அரசியல் இலாபம் தேடப் பார்க்கின்றனர். இதற்கு நாம் ஒரு (12 ஆம் பக்கம் பார்க்க)

### அனர்த்த நிவாரணம் குறித்து

## கிளிநொச்சியில் தமிழ்ச்செல்வனுடன் நோர்வேத் தூதுவர் நேற்றுச் சந்திப்பு!

(கிளிநொச்சி)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவது குறித்து அரசாங்கம் அனுப்பிய செய்தியுடன் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் நேற்று கிளிநொச்சிக்கு விஜயம்செய்து அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

நேற்றுக் காலை 10.30 மணிக்கு இந்தச் சந்திப்பு புலிகளின் சமாதானச் செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் அரசாங்கம் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் முகமாக அனுப்பிய செய்திபற்றி கலந்துரையாடப்பட்டது.

தொடர்ந்து காலை 11.30 மணிக்கு விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று யாழ்ப்பாணத்தில் துக்கதினம் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

சுனாமி கடற் கொந்தளிப்பால் உயிரிழந்த பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், இன்றைய தினத்தை துக்கநாளாக அனுஷ்டிக்குமாறு யாழ். மாவட்ட அரசியற்துறை கோரிக்கை விடுத்துள்ளது.

இன்று வர்த்தக நிலையங்களில் கறுப்புக் கொடிகளைக் கட்டியும், பொதுமக்கள் கறுப்புப் பட்டிகளை அணிந்தும் தமது நாளாந்தக் கடமைகளைச் செய்வது என்றும் - நண்பகல் 12 மணி முதல் 12.10 வரை சகல வாகனப் போக்குவரத்துக்களையும் இடைநிறுத்தி உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்துமாறும் யாழ். மாவட்ட அரசியற்துறை கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை இன்றைய தினத்தை அரசாங்கம் தேசிய துக்க தினமாக அறிவித்துள்ளது.

கடந்த 26 ஆம் திகதி ஏற்பட்ட (12 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கப் படையின் உதவிக்குழு வந்தது!

(கொழும்பு)

கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்காக அமெரிக்கப் படையணிகளிலிருந்து 30 பேரடங்கிய குழுவொன்று நேற்று கொழும்பு வந்தடைந்தது.

இது தொடர்பாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் - இந்த அழிவுகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் 30 பேரடங்கிய குழுவொன்று கேணல் தோமஸ் கொலின்ஸ் தலைமையில் இங்கு வந்துள்ளது.

இந்தக் குழுவானது மாலைதீவிலும் தனது பணிகளை மேற்கொள்ளவுள்ளது. எனவே இலங்கை மற்றும் மாலைதீவு அரசுகளுடன் இணைந்து உடனடி மனிதாபிமானப் பணிகளை இந்தக்குழு மேற்கொள்ளும். (12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
Your friend in the skies...

# கடற்கொந்தளிப்பில் உறவுகளைப் பிரிந்து தேடுவோர், தேடப்படுவோரின் விபரம்

கடற்கொந்தளிப்பினால் தமது உறவுகளைப் பிரிந்து அவதியுறும் மக்களுக்கு, அவர்களின் உறவுகளைத் தேடுவதற்காக அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் ஒரு தொடர்பு மையத்தை அமைத்துள்ளது.

இவ்வாறு அமைக்கப்பட்ட இந்தத் தொடர்பு மையத்தில் இதுவரையில் தமது விபரங்களைத் தெரியப்படுத்தியவர்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. இவர்கள் தொடர்பான விபரங்கள் தெரிந்தவர்கள், உறவுகளைத் தொடர்புபடுத்தும் தகவல் மையம், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், இல.106, 4 ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கோ அல்லது 021-222 2416 என்ற தொலைபேசி இலக்கத்திற்கோ அல்லது trro@sltnet.lk என்ற ஈ மெயிலுக்கோ அறிவிக்குமாறு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் கேட்டுள்ளது.

| தேடுவோர் | தேடப்படுவோர் |
|---|---|
| மரியஜெயசீலன் மரியநாயகி, பிலிப் மரியநாயகம். இல3, மூன்றாம் ஒழுங்கை முத்தமிழ் வீதி, கொட்டடி. | அன்ரன் ஜெயக்குமார், அன்ரன் செபநாயகம், அன்ரன் சாள்ஸ், அன்ரன் விஜித்தன். |
| திருமதி வே.இலட்சுமிப்பிள்ளை பாட்டன் சந்தி, தும்பளை, பருத்தித்துறை. | வே.நவரத்தினம், வே.சபாரத்தினம், வே.ஜெயரத்தினம். |
| வீரசிங்கம் ஜெயரஞ்சினி. உடுத்துறை வடக்கு, தாளையடி. | நவரத்தினம் ஜெயரூபி |
| ரி.சின்னத்துரை உரும்பிராய் கிழக்கு, றோமன் கத்தோலிக்க பாடசாலை வீதி, உரும்பிராய். | புஸேந்திரன் பிறேமா குடும்பத்தினர். |
| பி.டானியல் உரும்பிராய் கிழக்கு, றோமன் கத்தோலிக்க பாடசாலை வீதி, உரும்பிராய். | பி.ஸ்ரான்லி குடும்பத்தினர் |
| சந்திரா 222 3401 | திரவியம் குடும்பத்தினர் |
| அ.வசந்தகுமாரி பருத்தித்துறை கடற்கரை வீதி. | கனகலிங்கம் |
| பிரான்சிஸ் சேவியர் செல்வநாயகம்.. சக்கோட்டை அல்வாய் மேற்கு. | சூ.பேபிறெஜீனா |
| பாக்கியநாதன் றெமின்ரன் 3 ஆம் கட்டை பொலிகண்டி | இராயக்குட்டி சோபிதா (வயது 23) இராயக்குட்டி (வயது 19), ஆசீர்வாதம் பத்திநாதன் (வயது 70) |
| முருகுப்பிள்ளை கண்ணகியம்மா இன்பருட்டி, பருத்தித்துறை | மு.கமல்ராஜ் |
| ஸ்ரீஸ்கந்தராஜா இதயகுமாரி இன்பருட்டி, பருத்தித்துறை. | குமாரய்யா தங்கேஸ்வரி |
| மாணிக்கம் இந்திராதேவி 1 ஆம் கட்டை வியாபாரிமூலை, பருத்தித்துறை. | தேவராஜா தேவராணி, தே.தேவகுமாரி, தேவகுமார். |
| மகேந்திரன் கௌசல்யா. ஆண்டாள் வளவு, கரவெட்டி வடக்கு. | பாலசிங்கம் யூட்டாஸ், யூட்டாஸ் கௌரி, கந்தசாமி ரூபா. |
| ஜஸ்ரின் கொன்ஸிரின் மேரி - ஜஸ்லின். 4ஆம்குறுக்குத்தெரு, பருத்தித்துறை. | செபஸ்ரியாம்பிள்ளை பபி |
| ய.ஜஸ்லின் 4 ஆம் குறுக்குத்தெரு. | யூ.சுலக்சனா - வயது 1 |
| சி.பரிமேலழகன் வராத்துப்பளை கற்கோவளம். | சின்னத்தம்பி குடும்பத்தினர், புஸ்பராசா சாந்தி கும்பம். |
| ப.மகேஸ்வரி வராத்துப்பளை பருத்தித்துறை. | சந்திரா, ஜெகன் குடும்பம் (அல்லி), மாணிக்கம், ஈஸ்வரி |
| அன்ரனிமுத்து ஜசிந்தா இருதயக் கல்லூரி, தேவாலயம் | கந்தசாமி அற்புதம், முருகேசு சின்னமலர். |
| மைக்கல் கொலின் கொன்சியா குடாரப்பு, நாகர்கோயில், சென்ற்.அன்ரனி கரவெட்டி (தற்போது) | மை.மதுவந்தி, மை.கொஸ்ரலா, மை.கொன்சன், மை.நிருஜன் |
| பேதுருப்பிள்ளை அ.பிலோமினா மணல்ஒழுங்கை, பருத்தித்துறை சென்ற்-அன்ரனி கரவெட்டி (தற்போது) | அ.ஜெயச்சந்திரன் |
| சூரசிங்கம் ரதிதேவி அல்வாய் வடக்கு, வியாபாரிமூலை. சென்ற்-அன்ரனி கரவெட்டி (தற்போது) | மகாலிங்கம் தங்கத்துரை, த.யமுனாராணி (வயது 21), த.ராஜ்குமார் (வயது 18), இந்து (வயது 11), த.சதீஸ்குமார், சந்திரகுமார், பூஜா - வயது 03 |
| சூரசிங்கம் ரதிதேவி அல்வாய் வடக்கு, வியாபாரிமூலை, சென்ற்-அன்ரனி கரவெட்டி (தற்போது) | மகாலிங்கம் அருமைத்துரை, சறோ |
| ந.நவநீதன் குடாரப்பு, மாமுனை சென்ற்-அன்ரனி கரவெட்டி (தற்போது) | ந.விதுர்சன் |
| அ.சித்திரா 4 ஆம் குறுக்குத்தெரு. பருத்தித்துறை, சென்ற்-அன்ரனி கரவெட்டி. | செ.பவி, நி.அந்தோனிக்கம் - வயது 70, கு.மலர் - வயது 40 |
| அ.சித்திரா 4 ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை. சென்ற்-அன்ரனி கரவெட்டி. | ரி.செபஸ்தியாம்பிள்ளை (வயது 56), செ.மணி, செ.தாசன் |
| ந.நவநீதன் குடாரப்பு. சென்ற்-அன்ரனி கரவெட்டி. | செ.ஞானமுத்து - வயது 57, ஆசீர்வாதம் அந்தோனிக்கம்மா (வயது 70), ஞா.கிறிச்சன் (வயது 09) |
| க.ரவிச்சந்திரன் கற்கோவளம், புனித நகர், (புலோலி மெ.மி.த.க.பாடசாலை, தற்போது) | அ.மெரீனா - வயது 18, சிம்சோ - வயது 09, கிரியோன் |
| செல்வராசா சறோஜாதேவி நுணாவில் மத்தி, சாவகச்சேரி. | அம்பிகாவதி இளவரசி (துர்க்கா) |
| அ.எட்வின் ராஜா, மணற்காடு, குடத்தனை, தற்போது புலோலி. | ச.சின்னமணி, ஜெயமணி குடும்பம் |
| அ.நாதன் 64, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம் | டேவிற் மணி, டேவிற் சிம்சன், டேவிற் ஜான்சன், டேவிற் வனஜா |
| அ.நாதன் 64, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம் | விக்கி, விக்கி ரேவதி, கில்டா விக்கி. |
| இராசநாயகம் ரஞ்சினி 77/3 ஓடக்கரை வீதி, குருநகர். | திருமதி ரஞ்சினி நவரட்ணம் குடும்பம், மனோகரன் குடும்பம். |
| சிவதர்சினி நடராஜா 826/11 கே.கே.எஸ் வீதி, தட்டாதெரு. | முருகேசு நரவட்ணம், ந.ஜெயமலர், ந.பேபி, ந.இராஜ்குமார், ந.இரவீந்திர குமார்,ந.தவக்குமார்; ந.ரவிக்குமார். |
| ரி.மனோகரன் மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. | பொ.பிள்ளையான், பி.சறோஜனி. |
| குணரட்ணம் ஆவரங்கால் | ஐயாத்துரை தராபரன், ஐ.ஜனாத வினோதினி, ஐ.மோகனப்பிரியா, ஐ.தாரக பானுமதி, ஐ.ஹம்சத்வதனி |

**அம்பலாங்கொட தெல்வத்த புகையிரத நிலைய கடல் பிராந்திய கடல் கொந்தளிப்பில் 26.12.2004 இல் காணாமல் போனோர் பற்றிய அறிவித்தல்**

**ஜீவநாதன் — டைனேஸ்வரி குடும்பம் [இல.10 வைரவர் கோவில் வீதி, அரியாலை மேற்கு யாழ்ப்பாணம்]**

1. திருமதி ஜீவநாதன் - டைனேஸ்வரி
2. செல்வன் ஜீவநாதன் - நிறோஜன்

ஜீவானந்தம், அருள்நேசன் - மஞ்சுளா குடும்பம் (இல.சி-9 மிராஜ் வீடமைப்புத் திட்டம், சொய்ஷாபுர மொறட்டுவ)

3. திருமதி ஜீவானந்தம் அருள்நேசன்-மஞ்சுளா
4. கந்தையா - ஆசைப்பிள்ளை

தகவல் :
ஆ-ஜீவநாதன் பிரதம பொது சுகாதாரப் பரிசோதகர், மாநகரசபை, யாழ்ப்பாணம். (1016)

## அவசர வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்து மாணவர்களையும் பழைய மாணவர்களையும் இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடல், உள, நிதி ரீதியிலான உதவிகளை வழங்குவதற்கான விசேட யாழ்.இந்துச் செயலணியை உருவாக்குவதற்கான அவசர ஒன்றுகூடல் இன்று 1.00 மணிக்குக் கல்லூரியில் நடைபெறும் என்பதை பழைய மாணவர்கள் அறியத்தருகிறார்கள்.

## விரிவுரைகள் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

தற்போது ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தத்தை அடுத்து இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் விரிவுரைகள் மற்றும் ஏனைய கற்றல் செயற்பாடுகள் யாவும் எதிர்வரும் ஜனவரி மாதம் 3ம் திகதிவரை தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே மாணவர்கள அனைவரும் இதனைக் கவனத்திற் கொள்ளுமாறு இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலைய இயக்குநர் எந்திரி ச.ஆ.ஞானேந்திரா அறிவித்துள்ளார்.

## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் உதவும் கரங்கள் திட்டம்

(யாழ்ப்பாணம்)

கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் 'உதவும் கரங்கள்' திட்டமொன்றினை ஆரம்பித்துள்ளது. எனவே இந்தத் திட்டத்திற்கு உதவிசெய்ய விரும்புவோர், யாழ்ப்பாணம் வர்த்தக வங்கியிலுள்ள ரி.ஆர்.ஆர்.ஓ.லிமிட் என்ற கணக்கு இலக்கமான 1060012503 என்பதற்கோ அல்லது யாழ்ப்பாணத்தின் தேசிய சேமிப்பு வங்கியின் 1-0006-03-1207-0 என்ற கணக்கு இலக்கத்திற்கோ தமது நிதிகளை வைப்பிலிட்டு அவசர மனிதாபிமானப் பணிக்கு உதவுவதற்கு ஆதரவளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.


இந்த மண்ணில் போலிகளா...?

எச்சரிக்கை! எச்சரிக்கை!

☆ ஏமாற்றுபவர்களிடம் எச்சரிக்கையாக இருங்கள்.

☆ நாங்கள் உங்களுக்குத் தருவது

அசல் கோயோ ரேசர்களே

பயன் பெறும் உங்களுக்கு இதன் பெருமை புரிந்திருக்கும்

☆ இம்மண்ணிலும் போலிகளா எம்மையும் ஏமாற்றுகிறீர்களா?

☆ ஜப்பான் ஒரிஜினல் கோயோ ரேசருக்கு பதிலாக போலி ரேசருக்கு ஒறிஜினல் கோயோ றேசரின் குறியீட்டை சட்டவிரோதமாக பயன்படுத்தி போலிகளை ஒரிஜினல் என்று பாவனையாளர்களை ஏமாற்றி கொழுத்த இலாபம் பெறும் நோக்கில் ரேசர்களை விற்கும் சில வியாபாரிகளைப் பற்றி நாம் அறிய வந்துள்ளோம். இதனைப் பற்றி பாவனையாளர்கள் எச்சரிக்கையாக இருக்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

☆ ஐயா! போலி ரேசர் அல்லது நல்ல ஒறிஜினல் தனித்துவமான கோயோ ரேசர் பொருத்துவதற்கும் செலவு ஒன்று தான். ஆனால் போலி ரேசர்களின் பாவனையோ குறைந்த காலம். நல்ல ரேசரின் பாவனையோ நீண்டகாலம். இதில் எதை தெரிவு செய்வது என்பது பாவனையாளர்களாகிய உங்களின் கடமையே?

☆ நாம் இதனை உரிய அதிகாரிகளுடன் சேர்ந்து தகுந்த சட்டநடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கின்றோம் என்பதை உறுதி கூறுகின்றோம்.

வார்ப்பிலேயே பார்த்து வாங்குங்கள் கோயோ

Koyo®

நீண்ட பாவனைக்கும், நீடித்த உழைப்பிற்கும், உத்தரவாதம் அளிப்பது

எங்கள் Koyo® ரேசர்களே!

(C/3503)

தொலைபேசி எண்: 011 2341580 – 1, 011 2438779

தொலை நகல்: 011 2454608

செரெண்டிப் மோட்டர் என்ரபிறைசஸ் (PVT) லிமிட்
இல.60 B ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு – 10.

## புவியதிர்வை முன்னறிவிக்கும்

# கருவியை வைத்திருந்த போதிலும் பயன்படுத்தவில்லை என குற்றச்சாட்டு

(கொழும்பு)

பேராதனை பல்கலைக் கழகத்துக்கு வழங்கப்பட்ட புவியதிர்வை அளவிடும் கருவி உரிய முறையில் பயன்படுத்தப்பட்டிருந்தால் சுனாமி அலைகளின் தாக்கத்தால் ஏற்பட்ட பாரிய உயிரிழப்பைத் தவிர்த்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜப்பானிய ஜெய்க்கா நிறுவனப் பேச்சாளர் இது தொடர்பாக தகவல் தெரிவிக்கையில் -

எம்மால் அன்பளிப்புச் செய்யப்பட்ட உயர் தொழில்நுட்பம்வாய்ந்த புவியதிர்வை அளவிடும் கருவியை உரியமுறையில் பயன்படுத்தியிருந்தால் மூன்று நாட்களுக்கு முன்னரேயே புவியதிர்வு ஏற்படப்போவதை அறிந்து பெருமளவு உயிர்களைக் காப்பாற்றியிருக்கமுடியும் என்று ஜப்பானிய ஜெய்க்கா நிறுவனப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.



கொக்கலவில் இந்திய விமானப்படை ஹெலிகள் உதவிப் பொருட்களை வழங்குகின்றன.

# புவியின் சுழற்சி வேகம் குறைவதாக எச்சரிக்கை

(கொழும்பு)

இந்தோனேஷியாவின் சுமாத்திரா தீவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட பூகம்பத்தால் பூமி சுற்றும் வேகம் 3 மைக்ரோ வினாடிகளால் குறைவடைய வாய்ப்புள்ளதாக அமெரிக்க ஆய்வாளரான றிச்சட்கராஸ் தெரிவித்தார். (ஒரு மைக்ரோ வினாடி என்பது ஒருநிமிடத்தின் 10 லட்சத்தில் ஒன்றென்பது குறிப்பிடத்தக்கது)

இவர் தெரிவித்தது போல 3 மைக்ரோ வினாடி குறையும் சந்தர்ப்பத்தில் பூமியின் சுழற்சி வேகமும் தானாகக் குறைந்து விடுமெனவும் இதன்காரணமாக வருடத்திலுள்ள 365 நாட்களில் ஒருநாள் குறைவடைய வாய்ப்புள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனாலும் இது சாத்தியமானதுதானா என்பது இதுவரை உறுதி செய்யப்படவில்லை. இது தொடர்பான ஆய்வுகளை அமெரிக்கா உட்பட்ட சில நாடுகள் தொடங்கியுள்ளன. எனவே இது குறித்த விபரங்கள் மூன்று வாரங்களின் பின்பே தெரியவருமென தகவல்கள் தெரிவிக்கின்றன. எவ்வாறாயினும் 9 றிச்டர் அளவிற்கு ஏற்படும் பூகம்பங்களால் உலகம் தன்னைத்தானே சுற்றுவதில் பாதிப்புக்கள் ஏற்படுமென அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் காலை 7.30 மணியளவில் நிக்கோபார் தீவுகளில் 5.7 றிச்டர் அளவில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதன் பின்னர் 7.40 மணியளவில் நிக்கோபார் தீவுகளின் தலைநகரான கார்நிக்கோபார் பகுதியில் 6.1 றிக்சர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதன்பின்னர் 8.14 மணிக்கு மீண்டும் ஒரு நிலநடுக்கம் ஏற்பட்டது.

அந்தமான், நிக்கோபார் தீவுகளில் கடந்த 4 நாட்களில் 15 தடவை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதுடன், 35 தடவைக்கு மேல் நில அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன.

இந்தியப் பெருங்கடல் பகுதியல் நேற்றுமுன்தினம் காலை 35 தடவை நில நடுக்கம் ஏற்பட்டபோதிலும், சுனாமி அலைகள் வராதென நிபுணர்கள் அறிவித்துள்ளனர்.

இதனிடையே இந்தோனேஷிய நாட்டின் மேற்கு கடலோரப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 8.49 மணிக்கு 5.3 றிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



காலியில் உதவிப்பொருட்களை இறக்கும் ஹெலிகள்.

## பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்க

# ஐக்கிய நாடுகள் சபையும் இந்தியாவும் இணக்கம்!

சுனாமி கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு சாத்தியமான அனைத்து வழிகளிலும் உதவிகளை வழங்கப்போவதாக இந்தியாவும், ஐக்கிய நாடுகள் சபையும் தெரிவித்துள்ளன.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபி அனான் ஆகியோர் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவுக்கு இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளனர்.

இதற்கமைய ஆரம்பகட்ட உதவித் தொகையாக 200 கோடி ரூபாவை வழங்குவதற்கு இந்திய அமைச்சரவை இணக்கம் தெரிவித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கடல் அனர்த்தத்தால் இறந்தோரின் எண்ணிக்கை தொடர்ந்து உயர்ந்து வருகின்றது.

அம்பாறையில் மாத்திரம் 800 இறப்புக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக சமூக நலன்புரி அமைச்சின் கீழ் இயங்கும், இடர்காப்பு முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.



உதவிப் பொருட்களுடன் ஸ்பெயினிலிருந்து புறப்படத் தயாராகும் சரக்கு விமானம்!

## பாதிக்கப்பட்டோருக்கான நிவாரணப் பொருட்களுடன்

# புனர்வாழ்வுக்கழக விமானங்கள் இன்று கொழும்புக்கு வரவுள்ளன!

தமிழர்புனர்வாழ்வுக்கழகத்தின் இரண்டு சரக்கு விமானங்கள் இன்று அல்லது நாளை கொழும்பை வந்தடையலாமென தெரியவருகிறது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சுவிஸ் கிளையினரால் சுவிஸ் நாட்டில் கொள்வனவு செய்யப்பட்ட மருந்துப் பொருட்கள், உணவுப் பொருட்கள், உடுபுடவைகளுடன் இந்த இரண்டு விசேட விமானங்களும் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடையுமென அறியமுடிகிறது. இந்த இரண்டு விமானங்களில் கொண்டு வரப்படும் பொருட்கள் அனைத்தும் உடனடியாக வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பிவைக்கப்படவிருப்பதாக அறியமுடிகிறது.

இதற்கான ஏற்பாடுகளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கொழும்புக் கிளை ஈடுபட்டுள்ளது. தற்போது ஏற்பட்டுள்ள அவல நிலமைகளைக் கருத்திற்கொண்டு உலகமெங்கும் வாழும் தமிழ் மக்கள் உடனடியாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் கூட்டாக இணைந்து சேவையாற்றுமாறு வேணடப்பட்டுள்ளது.

# அத்தியாவசிய ஆணையாளராக திலக் ரணவிராஜ நியமனம்!

(கொழும்பு)

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளராக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் சட்டம், ஒழுங்கு அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜ நியமிக்கப்பட்டுள்ளார்.

உடன் அமுலுக்கு வரும்வகையில் இந்த நியமனத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வழங்கியுள்ளார்.

கடற்கொந்தளிப்புகள் காரணமாக ஏற்பட்டுள்ள அனர்த்தங்கள் மற்றும் அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கும் சகல பொறுப்புக்களும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதனால் இடம்பெயர்ந்தவர்களுக்குத் தேவையான உணவு, குடிநீர், மருந்து ஆகியவற்றை வழங்குதல், துரிதமாக வீடுகளை அமைத்துக் கொடுத்தல் தொடர்பாக சகல ஏற்பாடுகளும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரால் மேற்கொள்ளப்படும்.

## கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டோருக்கு

# மனிதாபிமான உதவிகளை வழங்கி உதவுமாறு காத்தான்குடி முஸ்லிம் சம்மேளனம் வேண்டுகோள்

காத்தான்குடி பிரதேசத்தில் கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் மனிதாபிமான அடிப்படையில் உதவிகளை வழங்குமாறு காத்தான்குடி முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம் உருக்கமான வேண்டுகோளை விடுத்துள்ளது.

காத்தான்குடி பிரதேசத்தில் கடல் அலையின் கொடூரத்தால் புதிய காத்தான்குடி, றிஸ்வி நகர் வதுறியா நகர், மஸ்ஜிதுல் அப்றார் பகுதி, மஸ்ஜிதுல் அன்வர் பகுதி, 2ஆம், 3ஆம் குறுக்குத் தெரு, விடுதி வீதி நூறாணியா பகுதி, அப்துல் லத்திப் சின்னலெவ்வை மாவத்தை உள்ளிட்ட கடற்கரையோரப் பிரதேசங்கள், கர்பலா நகர் உட்பட பெருமளவான பகுதிகள் மற்றும் தக்வா நகர் ஆகிய பகுதிகளும் கடல் நீரால் அடித்துச் செல்லப்பட்டு 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் பாடசாலைகளிலும் பள்ளிவாசல்களிலும் தஞ்சமடைந்துள்ளதுடன் 100 இற்கும் மேற்பட்டோர் இற்றைவரை கண்டுபிடிக்கப்படாமல் உறவினர்கள் தேடி அலைகின்றனர்.

அழுகைக் குரல்கள் இன்றும் ஓயாத நிலையில் கட்டடங்களுக்குள்ளும் கடல் மற்றும் வாவியிலும் சடலங்கள் நேற்றும் கரையொதுங்கிக் கொண்டிருக்கின்ற பரிதாப நிலை தொடர்கின்றது.

காத்தான்குடி முஸ்லிம் மக்கள் ஒன்றியம், இஸ்லாமிய வழிகாட்டல் நிலையம், முஸ்லிம் மக்கள் செயல் முன்னணி போன்ற அமைப்புக்கள் சடலங்களை மீட்கும் பணியிலும் ஏனைய பணியிலும் அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகின்றன.

நிவாரணப் பொருட்களை வழங்க விரும்புவோர் பள்ளிவாசல் சம்மேளனத்திடம் மட்டும் வழங்கி அவை பாதிக்கப்பட்ட மக்களுக்கு சரியான முறையில் சென்றடைவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

## கடற்கொந்தளிப்பால்

# பலியான - பாதிக்கப்பட்டோருக்கு ரொறன்ரோவில் விசேட திருப்பலி!

(கொழும்பு)

தெற்காசியாவில் இடம்பெற்ற சுனாமி இராட்சத அலைகளால் எழுந்த பாரிய வெள்ளப் பெருக்கில் தங்கள் இன்னுயிரைப் பலி கொடுத்த அனைத்து உள்ளங்களுக்காகவும், படுகாயமடைந்த அல்லது பாதிப்படைந்த அனைத்து மக்களுக்காகவும், அவர்களது உறநார், உறவினர்கள் ஆறுதலும் தேறுதலும் பெறவும், விசேட திருப் பலி ஒன்று ரொறன்ரோ ஆயர் தலைமையில் ஸகாபரோவில் நடைபெறவுள்ளது.

ரொறன்ரோவின் பல்லின பல்கலாசார சமூகத்திற்குப் பொறுப்பாகவுள்ள ஆயர் அதிவண. றிச்சர்ட் கிரெக்கோ, கெனடி- எக்லின்ரன் சந்திப்பில் அமைந்துள்ள புனித மரிய கொறற்றி ஆலயத்தில், நேற்று மாலை 6.30 மணிக்கு தமிழ் குருக்களுடன் இணைந்து சிறப்புத் திருப்பலி நிறைவேற்றினார்.



## இங்கிலாந்துடனான 2 ஆவது டெஸ்ட்

# தென்னாபிரிக்காவின் வெற்றிக்கு 378 ஓட்டங்கள் பெறவேண்டும்!

(டேர்பன்)

இங்கிலாந்து, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் டேர்பனில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் தென்னாபிரிக்க அணி 2 விக்கெட்டுக்களை இழந்து 60 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

முன்னதாக மூன்றாம் நாள் ஆட்டநேரமுடிவில் 4 விக்கெட் இழப்பிற்கு 385 ஓட்டங்களைப் பெற்ற இங்கிலாந்து அணி நான்காம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்தது. இதில் ஆட்டமிழக்காமலிருந்த தோர்ப் 40 மற்றும் பிளின்ரொப் 35 இருவரும் தமது ஆட்டத்தைத் தொடர்ந்தனர். இந்த ஜோடி 5 ஆவது விக்கெட்டுக்கு இணைப்பாட்டமாக 114 ஓட்டங்கள் சேர்த்தது. இதில் பிளின்ரொப் 60 ஓட்டங்கள் பெற்றிருக்கையில் ஆட்டமிழந்தார்.



இதன்பின்னர் வந்த ஜோன்ஸ் சிறந்த ஒத்துழைப்புவழங்க தோர்ப் டெஸ்ட் போட்டிகளில் தனது 16 ஆவது சதத்தைக் கடந்தார். தென்னாபிரிக்காவிற்கெதிராக இவர் எடுக்கும் இரண்டாவது சதம் இதுவாகும். இந்தநிலையில் சிறப்பாக ஆடிவந்த ஜோன்ஸ் 73 ஓட்டங்களில் நிக்கிபோஜேயின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

இந்த நிலையில் 7 விக்கெட் இழப்பிற்கு 570 ஓட்டங்களைப் பெற்ற இங்கிலாந்து தனது ஆட்டத்தை நிறுத்துவதாக அறிவித்தது இதில் தோர்ப் ஆட்டமிழக்காமல் 118 ஓட்டங்களை எடுத்திருந்தார். 378 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி பெறலாம் என்ற நிலையில் தனது இரண்டாவது இனிங்ஸைத் தொடங்கிய தென்னாபிரிக்க அணி நான்காம் நாள் ஆட்டநேரமுடிவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 60 ஓட்டங்களை எடுததுள்ளது.

# திருத்திய பின்னுறுதித் தீர்வை

## யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

லொயலா செல்வச்சீராளன்,
இல, 41 மத்தியூஸ் றோட்,
யாழ்ப்பாணம்.

வழக்காளி

வழ.இல. மணநீக்கம் /277 எதிராக

லொயலா செல்வச்சீராளன் பெண்
பிறின்சியா,
லயா அன்ரோணியா
வெளிசியானோ 110
90100 பலர்மோ பா
இத்தாலி.

எதிராளி

இவ்வழக்கு 2004 ஆண்டு கார்த்திகை மாதம் 9 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற நீதிபதி திரு.இ.த. விக்னராஜா அவர்கள் முன்னிலையில் வந்தபோது எதிராளியின் பதிவுபெற்ற சட்டத்தரணி திரு.ந.ரவிராஜ் நகர்த்தல் பத்திரம் அணைத்து இவ்வழக்கை ஆதரிக்கக் கூப்பிடுமாறு கோரியதற்கு அமைய கூப்பிடப்பட்டு எதிராளியின் பதிவுபெற்ற சட்டத்தரணி மன்றுக்கு சமர்ப்பணங்களை சமர்ப்பித்த பின்னர் மன்று எதிராளியின் பதிவுபெற்ற சட்டத்தரணியின் சமர்ப்பணத்தை வழக்கேட்டுடன் பரிசீலித்தபோது எதிராளியால் மன்றுக்கு அணைக்கப்பட்ட 30.4.2004 ஆம் திகதி கொண்ட மறுமொழியிலும் 27.9.2004 இல் இவ்வழக்கில் ஒருமுக விளக்கதின்போது எதிராளி மன்றுக்கு அளித்த சாட்சியத்திலும் வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையில் பிறந்த பிள்ளைக்கு ரூபா இருபது லட்சம் நிரந்தரப் பிரமனைப் பணம் என்றும் மறுமொழியில் எதிராளிக்கு நிரந்தரப் பிரமனைப் பணம் ரூபா இருபது லட்சம் என்றும் எதிராளியின் சாட்சியத்தில் இருபது லட்சம் என்றும் இருப்பதையும் மன்றினால் 27.9.2004 இல் வழங்கப்பட்ட ஒருமுகத் தீர்ப்பில் எதிராளிக்கும் எதிராளியின் குழந்தையான ஜென்சனுக்கும் நிரந்தரப் பிரமனைப்பணமாக ரூபா.250,000/= செலுத்த வேண்டும் என்று காணப்படுவதையும் கவனத்தில் எடுத்து 27.9.2004 இல் வழங்கிய தீர்ப்பில் இருபது லட்சம் என்பதற்குப் பதிலாக ரூபா.250,000 கைப்பிழைப்பாடாக (per incusiam) குறிப்பிடப்பட்டுள்ளது என்பதையிட்டு மன்ற திருப்திப்படுவதால் குடியியல் நடைமுறைச் சட்டக் கோவையின் பிரிவு 739 க்கு அமைய மன்றின் தற்துணிவு அதிகாரத்தைப் பிரயோகித்து 27.9.2004 இல் மன்றினால் எதிராளியின் சாட்சியத்தின்படி வழங்கப்பட்ட ஒருமுகத் தீர்ப்பில் எதிராளிக்கும் எதிராளியின் பிள்ளைக்கும் நிரந்தர பிரமனைப் பணமாக வழக்காளி ரூபா 250,000/= செலுத்தவேண்டுமென்று இருப்பதை எதிராளிக்கும் பிள்ளை ஜென்சனுக்கும் வழக்காளி நிரந்தரப் பிரமனைப் பணமாக தலா ரூபா இருபது லட்சம் செலுத்த வேண்டுமென்றும் என்று திருத்தி கட்டளையிட்டதற்கு அமைய,

இவ் வழக்கு 2004 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 27 ஆம் திகதி மேற்படி மாவட்ட நீதிமன்ற நீதிபதி அவர்கள் முன்னிலையில் வந்தபோது எதிராளியும், எதிராளி சார்பில் பதிவுபெற்ற சட்டத்தரணி திரு.ந.ரவிராஜ் அவர்களும் பிரசன்னமாகியிருக்க எதிராளியின் சட்டத்தரணி திரு ந.ரவிராஜ் அவர்கள் இவ் வழக்கில் சம்பந்தப்பட்ட வழக்காளிக்கு குடாநாட்டில் வெளியாகும். தினக்குரல், வலம்புரி, உதயன், நமது ஈழநாடு ஆகிய பத்திரிகைகள் மூலம் 18.09.2004 ஆம் திகதி விளம்பரப்படுத்தி பதில் சேவகம் செய்து அறிவித்தல் சேவிக்கப்பட்டு திரும்பல் திகதியாகிய இன்று மன்றுக்கு வழக்காளி சமுகமளிக்காமையால் இவ் வழக்கை மன்று ஒருமுக விளக்கத்துக்கு எடுக்கவேண்டுமென்றும் இன்று எதிராளி மன்றில் சமுகமாக இருப்பதால் எதிராளியின் ஒருமுக விளக்கத்தை நடாத்த அனுமதிக்க வேண்டுமென்றும் விண்ணப்பித்ததற்கு அமைய மன்றின் அனுமதியுடன் எதிராளியின் சாட்சியம் நெறிப்படுத்தப்பட்ட பின்னர், எதிராளியின் மறுமொழி அணைக்கப்பட்ட எ1 என்ற ஆவணம் எதிராளி இன்று மன்றில் அளித்த சாட்சியம் வழக்காளியின் பிராது ஆகியவற்றை மன்று வழக்கேட்டுடன் நன்கு பரிசீலித்து எதிராளி தனது மறுமொழியின் கோரிக்கையில் குறிப்பிட்டவற்றை மன்றிடம் இருந்து பெறத் தகுதியுடையவரெனக் கண்டு பின்வருமாறு கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

எதிராளிக்கும் வழக்காளிக்கும் இடையில் 1989 ஆம் ஆண்டு ஆனி மாதம் 14 ஆம் திகதி நிறைவேறிய பதிவுத் திருமணத்தை வழக்காளி எதிராளியை வன்ம உறவறுப்பு புரிந்த குற்றத்துக்காக இத்தால் இரத்துச் செய்து வெற்றும் வெறிதுமாக்கி கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

வழக்காளி எதிராளிக்கு நிரந்தர பிரமனைப் பணமாக ரூபா இருபது லட்சம் செலுத்தவேண்டுமென்றும் இத்தால் கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையே பிறந்த ஆண் பிள்ளையான ஜென்சன் என்பவரின் பாதுகாப்பும், பராமரிப்பும் தொடர்ந்து எதிராளியிடமே இருக்கவேண்டுமென்று கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

வழக்காளி தனது பிள்ளையின் ஜென்சன் என்பவருக்கு நிரந்தரப் பணமாக ரூபா இருவது லட்சம் செலுத்த வேண்டுமென்று இத்தால் கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

இப் பின்னுறுதித் தீர்வையின் பிரதி வழக்காளிக்கு குடாநாட்டின் பிரசுரிக்கப்படும் தினக்குரல், உதயன், வலம்புரி, நமது ஈழநாடு ஆகிய பத்திரிகைகள் மூலம் விளம்பரப்படுத்தி பதில் சேவகம் செய்த திகதியிலிருந்து மூன்று மாதகாலத்திற்குள் வழக்காளி இப் பின்னுறுதித் தீர்வையை ஏற்று முற்றான தீர்வையாக்கப்படக்கூடாதென்பதற்கு ஏதாவது காரணம் காட்டப்பட்டிராவிடத்து விதிக்கப்பட்ட காலம் முடிவடைந்ததும் இப் பின்னுறுதித் தீர்வை முற்றான தீர்வையாக்கப்படுமெனக் கட்டளையிடப்படுகின்றது.

2004 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 09 ஆம் திகதி.

மாவட்ட நீதிபதி.

வரைந்தது
எதிராளியின் சட்டத்தரணி.

(1011, 961)

நீதிமன்றக் கட்டளைப்படி
து.சிறீமோகன்.

## ஐ.சி.சி அனுதாபம்

(லண்டன்)

கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டுள்ள இந்தியா, இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்கு சர்வதேச கிரிக்கெட் சபை ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளது.

பூகம்பம், அதைத் தொடர்ந்து ஏற்பட்ட "கடல் கொந்தளிப்பால் உயிரிழந்த அனைவருக்கும் சர்வதேச கிரிக்கெட் சபை தனது நெஞ்சார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது" என அதன் தலைவர் ஈசான் மணி தெரிவித்துள்ளார்.

இந்தியா, இலங்கை விளையாட்டு அமைப்புக்களிடம் உதவி செய்வது குறித்து ஆலோசிப்போம் எனவும் அவர் கூறியுள்ளார்.

## விளையாட்டு

# நியூஸிலாந்து போட்டித் தொடரை ஒத்திவைப்பதற்கு இணக்கம்!



(வெலிங்டன்)

கடற்கொந்தளிப்பால் அதிகளவில் உயிர்ப்பலி ஏற்பட்டதைத் தொடர்ந்து இலங்கை நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் போட்டித்தொடர் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அத்தப்பத்து தலைமையிலான இலங்கை கிரிக்கெட் அணி நியூஸிலாந்தில் பயணஞ்செய்து விளையாடிவருகிறது. இலங்கை - நியூஸிலாந்து இடையேயான முதல் ஒரு நாள் போட்டியில் நியூஸிலாந்து வெற்றிபெற்றது. இவ்விரு அணிகள் இடையேயான 2 ஆவது ஆட்டம் நேற்றுமுன்தினம் நடப்பதாக இருந்தது.

கடற்கொந்தளிப்பால் ஏற்பட்ட அழிவுகளைத் தொடர்ந்து இலங்கை அணியினர் நியூஸிலாந்துப் பயணத்தைப் பாதியில் முடித்துவிட்டு உடனடியாக நாடு திரும்புவார்கள் என்று கூறப்பட்டது. இதனால் நேற்று முன்தினம் நடப்பதாகவிருந்த 2 ஆவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியும் நடக்கவில்லை. இந்த நிலையில் இதுகுறித்து இருநாட்டு கிரிக்கெட் சபையும் பேச்சு நடத்தியது. பேச்சுவார்த்தை சுமுகமாக முடிந்ததால் போட்டி தொடர்ந்து நடக்கும் என அறிவிக்கப்பட்டது.

புது அட்டவணை அறிவிக்கப்பட்டு அதன்படி போட்டிகள் நடக்க இருந்தது. நேற்றுமுன்தினம் நடப்பதாக இருந்த 2 ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடக்கும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் இவ்விரு நாடுகள் இடையேயான பேச்சுவார்த்தையில் திடீர் திருப்பம் ஏற்பட்டுள்ளது. இலங்கையில் கடல்கொந்தளிப்பில் இறந்தவர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டேபோவதால் இந்த இக்கட்டான நிலையில் போட்டி நடப்பது மனரீதியாக நன்றாக இருக்காது என்பதால், போட்டித் தொடரைத் தள்ளிவைப்பது என்று முடிவெடுக்



இருநாட்டு கிரிக்கெட் சபையும் சேர்ந்து இந்த முடிவை எடுத்துள்ளன. இதை ஐ.சி.சி. தலைமை நிர்வாகி மல்கம் ஸ்பட் உறுதிசெய்துள்ளார். போட்டி எப்போது நடக்கும் என்பது குறித்து இன்னும் முடிவு செய்யப்படவில்லை. ஒருநாள் போடடித் தொடர் தள்ளிவைக்கப்பட்டதைத் தொடர்ந்து இலங்கை அணியினர் உடனடியாகத் தாயகம் திரும்பவுள்ளனர்.

இலங்கை அணி நியூஸிலாந்தில் இருந்து நேற்று புறப்பட இருந்தது. ஆனால், ஆக்லாந்திலிருந்து இலங்கைக்கு விமானப் போக்குவரத்து இல்லாததால் இன்று தான் இலங்கை அணி நாடு திரும்புகிறது.

# உதைபந்தாட்டப் பயணத்தை சீன அணி இரத்துச் செய்தது

சீன அணி அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் மெக்சிக்கோ, அமெரிக்கா மற்றும் சவுதி அரேபியா ஆகிய அணிகள் பங்கேற்கும் கால்பந்துத் தொடரில் பங்கேற்க அமெரிக்கா செல்ல இருந்தது.

ஆனால், இதே காலகட்டத்தில் சவுதி அரேபிய அணி உலகக் கோப்பை கால்பந்துத் தகுதிச்சுற்றில் பங்கேற்கவேண்டும். ஆகவே, தொடரை முன்னதாகவே ஜனவரி 23, 29 இல் நடத்த அமெரிக்கா முடிவுசெய்தது. ஆனால், இதுபற்றித் தங்களுக்கு முறையான தகவலை அமெரிக்கா அனுப்பவில்லை என சீனா குற்றஞ்சாட்டியுள்ளது.

எனவே தங்களால் இந்தத் தொடரில் பங்கேற்க இயலாதெனவும், இந்தப் பயணத்தை இரத்துச் செய்வதாகவும் சீன கால்பந்து அணி முகாமையாளர் ஜுயான் ஹி தெரிவித்துள்ளார்.

# உயிரிழந்தவர்களின் மரணவிசாரணை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்!

(யாழ்ப்பாணம்)

கடற்கொந்தளிப்பின்போது உயிரிழந்தவர்களின் மரணவிசாரணைகள் பருத்தித்துறை - மாவட்ட நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் முதல் நடைபெற்று வருகின்றன.

இதன்போது, உயிரிழந்தவர்களின் உறவினர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகி வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்பட்டு வருகின்றன.

மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் தலைமையில் இடம்பெற்றுவரும் மரணவிசாரணையில் நேற்று மட்டும் 58 பேரின் விசாரணைகள் பதிவுசெய்யப்பட்டன. இந்த விசாரணைகள் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

கடல் கொந்தளிப்பினால் பாதிப்படைந்த கிராமங்களின் கிராம அலுவல்கள் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரையும் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் தெரிவித்தார். (12)

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவது குறித்து அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆராய்ந்தன!

யாழ். மாவட்டம் மற்றும் வன்னி ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கல் மற்றும் அவர்களுக்குரிய அத்தியாவசிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் யாழ் மாவட்ட அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் இணைய மண்டபத்தில் இடம்பெற்றது.

இணையத்தின் தலைவர் வி.ஸ்ரீ சக்திவேல் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, துரித நிவாரணங்களை வழங்க பல்வேறு முடிவுகள் எடுக்கப்பட்டன. இதற்கென நிகழ்ச்சித் திட்டம் ஒன்றும் தயாரிக்கப்பட்டது. இதன்படி இடம்பெயர்ந்தவர்களுக்கு நிவாரணம் வழங்குதல், மீள்குடியமர்வு, ஜீவனோபாயம், தொழில் வசதிகள் அழிவின் மதிப்பீடு, ஒருங்கிணைப்பு என்பவற்றை அடிப்படையாக வைத்து இவர்களுக்குரிய நிவாராணங்களை வழங்குதல் இந்த நிகழ்ச்சி திட்டத்தின் நோக்கமாகும். இந்தக் கலந்துரையாடலில் மேலும் பல ஆலோசனைகளும், திட்டங்களும் முன்வைக்கப்பட்டன.

முக்கியமாக அனைவரும் ஒன்றுபட்டு ஒருங்கிணைந்த ஒரு குழுவாக செயற்பட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுதல், பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் ஏற்பட்ட அழிவை தெட்டத்தெளிவாக வெளியுலகுக்கு தெரியப்புடுத்துதல், மக்களுக்கு முழுதாக கிடைக்கவேண்டிய நிதி தென்பகுதிக்குச் செல்வதை தடுக்க அழிவுகளையும், பாதிப்புக்களையும் உடன் மதிப்பிட்டு வெளிநாட்டு தூதரகங்களுக்கு தெரியப்படுத்தல் போன்ற ஆலோசனைகள் முன்வைக்கப்பட் டன.

தனிப்பட்டவர்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பொருட்களை சேகரிப்பதால், பல்வேறு விளைவுகள் ஏற்படுகின்றது என்றும் அதை தடுத்து அதிகாரம் பெற்ற நிறுவனங்கள் மூலம் மக்களிடம் பொருட்கள் சேகரித்தல் போன்ற விடயங்களும் நேற்றைய கலந்துரையாடலில் இடம்பெற்றிருந்து.

நேற்றைய இந்தக் கலந்துரையாடலில் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் இளம்பரிதி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் ஈடுபட நல்லை ஆதீன முதல்வர் அழைப்பு!

(யாழ்ப்பாணம்)

கடல் கொந்தளிப்பின்போது உயிரிழந்த மக்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் ஈடுபடுமாறு நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடல் கொந்தளிப்பின்போது உயிரிழந்த மக்களின் ஆத்மா சாந்தியடையவும், மனஅமைதி ஏற்படவும் நாளை மறுதினம் பொது இடங்களில் பிரார்த்தனையில் ஈடுபடுமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இயற்கையின் அனர்த்தத்தால் உயிர்களையும், உடமைகளையும் இழந்து நிர்க்கதியாகி இருக்கும் மக்களுக்கு உதவி செய்வதற்கு அனைத்து மக்களும் ஒன்றுபட்டுச் செயற்படவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

# சேகரித்த பொருட்களை விற்று குடித்துக் கும்மாளமிட்ட இளைஞர்கள்

## எச்சரிக்கையின் பின் விடுதலை

(யாழ்ப்பாணம்)

கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டடவர்களுக்கு எனச் சேகரிக்கப்பட்ட நிதியில் குடித்துக் கும்மாளமிட்ட இளைஞர்கள் சிலரை கலாசாரத்தைப் பேணும் இளைஞர்குழுவினர் மடக்கிப் பிடித்து நையப்புடைத்த பின் எச்சரித்து விடுதலை செய்யபட்ட சம்பவம் சுன்னாகம் பகுதியில் இடம்பெற்றது.

எனவே, உதவிகோரி இனிவருபவர்களை அமைப்பு சார்ந்தவர்களா, அல்லது ஏமாற்றுப் பேர்வழிகளா என்பதை உறுத்திப்படுத்தி உதவி புரியுமாறு பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. (111)

# பாதிக்கப்படாத மக்களின் உதவிகளே பாதிக்கப்பட்டோருக்கு கிடைக்கிறது!

## நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசன்

பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாதிக்கப்படாத மக்களினால் உதவிகள் கிடைக்கின்றதே தவிர, அரசங்கத்தினாலோ அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களாலோ உதவிகள் கிடைப்பதில்லை என, நாடாளுமன்ற உறுப்பினர் சிவனேசன் குற்றஞ்சாட்டினார்.

நேற்று முன்தினம் யாழ்.செயலகத்தில் நடைபெற்ற உதவிப்பொருட்கள் வழங்கல் தொடர்பான கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கையிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களை தென்னிலங்கையிலுள்ள சில ஊடகங்கள் வெளிப்படுத்தவில்லை, பாதிக்கப்பட்ட மக்கள் மீளக் குடியமர அஞ்சுகின்றனர். எமது மக்களின் உடனடித் தேவைகளைப் பூர்த்திசெய்யவேண்டும். அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் 10 வீதத்திற்கு குறைவாகவே காணப்படுகின்றன.

உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் யாழ். மாவட்டத்தில் 30 ஆயிரத்து 250 குடும்பங்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாத நிலை ஏற்பட்டதுடன், தற்போது 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இயற்கை அனர்த்தத்தினால் இடம் பெயர்ந்துள்ளனர்.

இதனால், இடநெருக்கடி ஒன்று ஏற்பட்டுள்ளது. உயர்பாதுகாப்பு வலயம் தளர்த்தப்படவேண்டும். தமிழ்த தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாதிக்கப்பட்ட மக்களின் பகுதிகளில் தற்போது கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

எனவே, மக்களுக்கு அரசு உடனடி உதவிகளை மேற்கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# சமுர்த்தி நலன்புரித் திட்டங்கள் தொடர்பான விண்ணப்பங்களை பூரணப்படுத்துவதற்கான பயிற்சி

யாழ்.மாவட்டத்தில் நடைமுறைப் படுத்தப்படவுள்ள சமுர்த்தி நலன்புரித் திட்டங்கள் தொடர்பான சமுர்த்தித் தரவு சேகரிக்கும் விண்ணப்பப் படிவங்கள் பூரணப்படுத்தப்படவுள்ளன.

இது சம்பந்தமான 3 நாள் பயிற்சி வகுப்பு சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்தப் பயிற்சி வகுப்பில் சமுர்த்தித் திட்டம் சமுர்த்தி விண்ணப்பபடிவங்கள் பூரணப்படுத்தல் தொடர்பாக பயிற்சி அளிக்கப்படும்.

இந்தப் பயிற்சி வகுப்பு எதிர் வரும் 30, 31 ஆம் திகதிகளில் 3 பிரிவுகளாக இடம்பெறவுள்ளது. இதனடிப்படையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் 28 கிராம அலுவலர் பிரிவுகளையும் 3 பிரிவுகளாகப் பிரித்து பயிற்சியளிக்கப்படும். இந்த பயிற்சி வகுப்புக்களில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள் கணக்கெடுப்பாளர்கள் ஆகியோர், கலந்து கொள்ளவுள்ளனர். (44)

# பாவனையில் இல்லாத வாகனங்களை உடன் பதிவுசெய்யுமாறு அறிவுறுத்து!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு,அம்பாறை ஆகிய மாவட்டங்களில் உள்ளோர் எவரேனும் மோட்டார் வாகனங்களைப் பாவிக்காமல் தம்வசம் வைத்திருப்பின் அதற்கான விண்ணப்ப படிவங்களை தத்தமது பிரதேச செயலகங்களில் பெற்று பூர்த்திசெய்து காசுக் கட்டளையுடன் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பிவைக்க வேண்டும் என வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ். ரங்கராஜா அறிவித்துள்ளார்.

இதற்கான இறுதி திகதி இன்றாகும். கட்டண விபரம் மோட்டார் அலலது முச்சக்கர வண்டிகளுக்கு ரூபா 25 உம், மோட்டார் லொறி மற்றும் மோட்டார் வண்டிகளுக்கு 100 ரூபாவும், ஏனைய வாகனங்களுக்கு 50 ரூபாவும் ஆகும்.

மேலும், திருகோணமலைப் பட்டணமும், சூழலும், வெருகல்(ஈச்சலம்பற்று) குச்சவெளி ஆகிய பிரதேச மோட்டார் வாகன உரிமையாளர்கள் தமது மோட்டார் வாகனங்களை உபயோகிக்காமல் இருக்குமிடத்து அவை பற்றி அறிவித்தலை உரியவாறு பூர்த்தி செய்து விண்ணப்ப படிவங்களை அனுப்புமாறு மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் கேட்டுள்ளார்.

விண்ணப்பங்கள் குறித்த கட்டணத் தொகைக்கு மாகாண மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் வடக்கு - கிழக்கு மாகாணம் என்ற பெயரில் பெயரிடப்பட்ட காசுக் கட்டளையை சேர்த்து மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களம், இல - 02, சாரதா வீதி, திருகோணமலை எனும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பப்படல் வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது.

2005 ஜனவரியிலிருந்து 06 மாதங்களுக்கு மேல் பயன்படுத்த முடியாது என தீர்மானிக்கப்பட்ட வாகனங்களின் விண்ணப்பங்கள் மட்டுமே, ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலக வங்கி நிதியுதவியுடன் புதியதிட்டம்!

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தின் காரணமாக வீடுகளை இழந்த வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மக்கள், மீளவும் தமது வீடுகளை கட்டுவதற்கு நிதியுதவி வழங்கும் முகமாக உலக வங்கியன் உதவியுடன் வடக்கு - கிழக்கு மாகாண சபையினாலும், மாவட்ட அரசாங்க அதிபர்களினாலும் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது. இந்தத் திட்டமானது 2005 - 2008 வரை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது

இத்தகையவர்கள் வீடுகள் கட்டுவதற்கு கட்டிட விண்ணப்பப் படிவங்களை விரைவாக பெறுவதற்கு உள்ளுராட்சி மன்றங்கள் உரிய நடவடிக்கை எடுக்குமாறு உள்ளுராட்சி ஆணையாளர் விஜயலட்சுமி வடகிழக்கு மாகாண சகல உள்ளுராட்சி மனறங்களுக்கும் தெரிவித்துள்ளார். (09)

## நிவாரண உதவிகளுக்காக

# கியூடெக் நிறுவனத்தினரால் தகவல்கள் சேகரிப்பு!

கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட யாழ்குடாநாட்டு மக்களுக்கு நிவாரணப் பணிகளை உரிய முறையில் செயற்படுத்துமுகமாக யாழ்.மாவட்டப் பிரிவு கியூடெக் நிறுவனத்தினர் தகவல்களைச் சேகரித்து வருகின்றனர்.

வடமராட்சியில் நிறுவனத்தின் இயக்குநர் அருட்தந்தை ஜெயக்குமாரின் பணிப்பின் பேரில் அருட்தந்தை ஜோயெல், சகல நலன்புரி நிலையங்களுக்கும் தமது குழுவினருடன் நேரடியாகவே சென்று படிவங்களை விநியோகம் செய்து, கிராம அலுவலர்களின் ஒத்துழைப்புடன் விபரங்களை சேர்த்து வருகின்றார்.

இந்த நடவடிக்கைக்கூடாக உண்மையான அழிவுகள், உயிரிழப்பு உடமைகளை இனங்கண்டு, நிவாரணப் பணிகளைத தொடரவிருப்பதாகவும், இதன்மூலம் பூரணமான தகவல்களைப் பெறக்கூடியதாக இருக்குமென்றும் அருட் தந்தை ஜோயெல் தெரிவித்தார்.

இந்தமுயற்சிக்குப் பாதிக்கப்பட்டவர்கள் தமது உண்மையான விபரங்களை வழங்குமாறும் அவர் கேட்டுள்ளார். மேலும், இவ்விபரங்களைச் சேகரிப்பதற்கு வடமராட்சிப் பிரதேச செயலர் உதவியையும் அவர் நாடியுள்ளாா. (13)

# தென்மராட்சிப் பகுதி கிராம அலுவலர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள சகல கிராம அலுவலர் பிரிவின் கிராம அலுவலர்களையும், இன்று காலை 11 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலகத்தில் ஒன்றுகூடுமாறு பிரதேச செயலர் ஸ்ரீனிவாசன் அறிவித்துள்ளார்.

# நெல்லியடி பஸ்தரிப்பிடங்கள் நாளைமுதல் புதிய இடங்களில்!

(நெல்லியடி)

யாழ்ப்பாணம் - பருத்தித்துறைகளுக்கு நெல்லியடியிலிருந்து பிரயாணங்கள் மேற்கொள்ளும் பஸ் பிரயாணிகளுக்கான பஸ் தரிப்பிடங்கள் 01-01-2005 முதல் இடமாற்றம் செய்யப்படவுள்ளன.

இதன்படி இதுவரை நெல்லியடி எரிபொருள் நிலையத்துக்கு அருகாமையில் இயங்கிவந்த பஸ்தரிப்பு நிலையம் நெல்லியடி மத்திய சந்தைக்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ளன. நெல்லியடியிலிருந்து யாழ்ப்பாணத்துக்குச் செல்லும் மக்கள் வடமராட்சி லயன்ஸ் கழகத்துக்கு முன்பாகவும், மத்திய சந்தைக்கு அருகாக பருத்தித்துறை நோக்கிப் பிரயாணம் செய்யவுள்ள பிரயாணிகள் சந்தைக்கு முன்பாகவும் தரித்து நின்று செல்லும் பஸ் வண்டிகள் மூலம் தமது பிரயாணங்களை மேற்கொள்ளுமாறு பொது மக்களுக்கு அறிவுறுத்தல் விடப்பட்டுள்ளது. (13)

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வுக் கழகம் உதவி

(மட்டக்களப்பு)

கடற்பூகம்பத்தால் பாதிக்கப்பட்டுள்ள அம்பாறை மாவட்ட மக்களுக்கு உதவுவதெற்கென, தமிழர் புனர்வாழ்வுக்கழகம் துரித நடவடிக்கைகளை உடனடியாகவே மேற்கொண்டுள்ளது.

முதற்கட்டமாக தொடர் ஊர்திகளில் கொண்டுசெல்லப்பட்ட நிவாரணப் பொருட்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தொண்டர்கள், அம்பாறை நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களுக்கு வழங்கி வருகின்றனர்.

தொடர்ந்து மீட்புப் பணி ஒருபுறமும், நலன்புரி நிலையங்களில் மக்களைப் பராமரிக்கும் பணி ஒருபுறமுமாக ரீ.ஆர்.ஓ தொண்டர்கள் வேகமாக செயற்பட்டவண்ணமுள்ளனர்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### பாதிக்கப்பட்டோருக்கு உதவிப் பொருட்கள்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட புத்தூர் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பத்தொன்பது குடும்பங்களுக்கு சமூக நலத்துறைத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட பாய், பிளாஸ்டிக் வாளி என்பன கிராம அலுவலர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டன. (110)

### உலர் உணவுப் பொருட்கள் எடுத்துச் செல்லப்பட்டன

தென்மராட்சி பகுதியில் பொது அமைப்புக்கள் அரச நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்கள் போன்றவற்றின் மூலம் சேகரிக்கப்பட்ட உலர் உணவுப் பொருட்கள் நாடாளுமன்ற உறுப்பினர் த.ரவிராஜ் தலைமையிலான குழுவினரால் முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகிப்பதற்காக எடுத்துச் செல்லப்பட்டன. (29)

# உள்ளத்து உணர்வுகளை குழந்தைகள் பேச்சு வடிவில் வெளிப்படுத்துகின்றன






குழந்தைதானே? அதற்கு என்ன உணர்ச்சி இருக்கப் போகிறது என பல சந்தர்ப்பங்களில் நாம் அலட்சியமாக இருந்துவிடுவதுண்டு. பெரியவர்களுக்கு இருக்கும் எல்லா உணர்ச்சிகளும் குழந்தைகளுக்கும் இருக்கின்றன. என்ன ஆச்சரியமாக இருக்கின்றதா? ஆனால் குழந்தைகள் தங்கள் உணர்ச்சிகளை வெளியிடும் விதத்தில்தான் வித்தியாசமிருக்கிறது.

பெரியவர்களைவிட குழந்தைகளின் உணர்ச்சிகள் மிகவும் தீவிரமானது. உதாரணமாக ஒரு குழந்தை தன் அம்மா தன்னை இடுப்பில் வைத்துக்கொண்டு சோறு ஊட்ட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றது என்று வைத்துக்கொள்ளலாம். தான் நினைத்தது நிறைவேறும்வரை தன்னுடைய பிடிவாதத்தைத் தளர்த்தாமல் அழுது அடம்பிடிக்கும்.

பெரும்பாலும் குழந்தைகளிடம் பிடிவாத குணம் உருவாக - உணவு, தேவையான அளவு நித்திரை முதலியவை கிடைக்காமல் இருப்பதே முக்கிய காரணமாகும். இதனைவிட வும் குழந்தைப் பருவத்தின் பொதுவான சில உணர்ச்சிகளைப் பற்றிப் பார்ப்போம். இவற்றை அறிந்துகொள்வதன் மூலம் குழந்தைகளை சிறந்த ஆளுமையுள்ளவர்களாக வளர்த்தெடுக்கமுடியும்.

**கோபம் –**

தவழும்போது கால் உராய்தல், விளையாட்டுப் பொம்மைகளுடன் சண்டை, மற்றைய குழந்தைகளின் வேகமான தாக்குதல் முதலியன குழந்தையின் கோப உணர்வைத் தூண்டிவிடக் கூடியனவாகும்.

கோப உணர்வை - குழந்தைகள் அடிப்பது, கையில் கிடைக்கும் பொருளை எறிவது, காலைப் பரப்பிக் கொண்டு அழுவது, கடிப்பது, கிள்ளுவது நிலத்தில் புரண்டு அழுவது போன்ற செய்கைகளால் வெளிப்படுத்துகின்றன.

**பயம் –**

குழந்தைப் பருவம் பயமறியாப் பருவம். உடல் உணர்ச்சிகளின் மூலமே பயத்தை உணரும் நிலையில் உள்ளதால் குழந்தைகளின் பய உணர்வுகளுக்கு தொட்டதெல்லாம் காரணமாகி விடுகிறது. ஆகவே குழந்தையின் பயத்துக்குரிய காரணத்தை உடனடியாகக் கண்டறிந்து அப்பயத்தைப் போக்கவேண்டும்.

ஒரு சிறு எறும்பு கடித்து வலியால் அழத் தொடங்கும் குழந்தை கடிக்காத எறும்பைக்கூட கண்டதும் நசுக்கிவிடும் மனோபாவத்தை வளர்த்துக்கொள்கிறது.

தங்களுடைய உள்ளத்து உணர்வுகளைப் பேச்சு வடிவில் வெளிப்படுத்த குழந்தைப் பருவத்தில் முடியாது. ஆனால் குழந்தைகள் தங்களுக்குள்ளேயே கற்பனை செய்துகொள்கின்றன. தூக்கத்தில் சிரிப்பது, சிணுங்குவது, அழுவது முதலியன குழந்தைகளின் கற்பனைகளின் விளைவுகளாகும். இருட்டைக் கண்டு பயப்படுவது, எதையாவது பார்த்து பயப்படுவது முதலிய கற்பனைப் பயங்களைப் போக்கி குழந்தைகளுக்குத் தைரியமூட்டவேண்டும்.

விளையாட்டாகவும் சில நேரங்களில் ஏதாவது காரியம் நடக்கவேண்டும் என்பதற்காகவும் குழந்தைகளைப் பயங்காட்டுவது ஆபத்தானது. இது விபரீதமாகி குழந்தையின் மனதில் பயம் கௌவிக்கொண்டால் எதிர்காலத்தில் தனிமனித ஆளுமையையே பாதிக்கும் ஆபத்து உருவாகிவிடும். எனவே அர்த்தமற்ற பயங்களைக் குழந்தைகளின் மனங்களிலிருந்து விலக்குவது பெற்றோரின் கடமை.

**பொறாமை –**

பெற்றோரின் கவனம் அல்லது கருத்து தன்னைவிட்டு வேறிடம் தாவிவிட்டால் அதனைக் குழந்தைகளால் தாங்கிக்கொள்ள முடியாது. முக்கியமாக முதல் குழந்தை தனக்கடுத்துப் பிறந்த குழந்தை மீது தன் பெற்றோர் காட்டும் கவனிப்பை விரும்புவதில்லை. இது குழந்தையின் பொறாமை உணர்ச்சியைக் காட்டுகிறது. அப்பா அம்மாவின் மீது தன் பொறாமை உணர்ச்சியைக் காட்டமுடியாது என்பதால் அந்தப் பிஞ்சினை கிள்ளி அடித்து, கடித்து விட்டு வந்து விடும் மூத்த குழந்தை. மறைமுகமாக தன் பொறாமையைக் காட்டும். இந்தமாதிரியான குணங்களைக் குழந்தைகள் வளர்த்துக் கொள்ளக் காரணம், பெற்றோர் தன்னைக் கவனிக்கவேண்டும் என்பதற்காகத்தான்.



**ஆர்வம் –**

குழந்தைப் பருவத்தில் காணும் எந்தப் பொருளையும் புதுமையானதாகவே உணருகிறது குழந்தை. ஒரு பொருளைக் கண்டதும் அந்தப் பொருளைப் பற்றித் தெரிந்துகொள்ள ஆர்வமடைகிறது. ஆரம்பத்தில் அப்பொருளை பிடிக்கவோ எடுக்கவோ எத்தனிக்கும் குழந்தை வளர்ந்த பின் புதுப்பொருட்களைப் பற்றி பல நூறு கேள்விகளைக் கேட்கத் தொடங்கும். அப்போது பெரியவர்களும் பெற்றோரும் பொறுமையுடன் பதில் சொல்லவேண்டும்.

**ஏக்கம் –**

மற்றைய குழந்தைகளின் திறமைக ளைப் பார்த்தும், அவர்களிடமுள்ள பொருட்களைப் பார்த்தும் குழந்தைகள் ஏங்கும். இம்மாதிரியான ஏக்கங்கள் உள்ள குழந்தைகள் கோள்சொல்லும் அல்லது அந்தப் பொருளைப் பற்றியே கதைத்துக் கொண்டிருக்கும். முடிந்தவரை பெற்றோர்கள் குழந்தைகளின் மன ஏக்கங்களைத் தீர்த்துவிடவேண்டும்.

**மகிழ்ச்சி –**

புதிய ஒலிகள் புதிய பொருட்களைப் பார்த்தல் மற்றைய குழந்தைகள் அல்லது பெற்றோருடன் விளையாடும்போது குழந்தைகள் மகிழ்ச்சியடைகிறார்கள். இந்த மகிழ்ச்சியுடன் மத்தாப்பு சிரிப்பு, கைகொட்டி சிரிப்பு, துள்ளல், குதித்தல் அல்லது சந்தோஷத்துக்குரிய பொருள், மனிதரைக் கட்டிக் கொள்ளுதல் முதலிய செய்கைகளைச் செய்கின்றனர்.

**சோகம் –**

குழந்தை தான் விரும்பும் எந்தப் பொருளாவது அல்லது நபராவது அதை விட்டுப் பிரிந்துவிட்டால், அந்தக்குழந்தை சோகமாகி விடுகிறது. இச்சோகநிலையைக் குழந்தை தன் அழுகையின் மூலம் வெளிப்படுத்துகிறது. தன்னுடைய இயல்பான உண்ணல், உறங்கல் முதலிய செய்கைகளைக் கூட புறக்கணிக்கின்றன.

**பாசம் –**

குழந்தைகள் பொருட்களையும், மனிதர்களையும் ஏன் மிருகங்கள் பறவைகளையும் நேசிக்கத் தெரிந்துகொள்கின்றனர். தங்களுடைய பாசத்தை கட்டியணைத்தல், முத்தமிடுதல், தட்டிக்கொடுத்தல் போன்ற செயல்களால் வெளிப்படுத்துகின்றனர்.

குழந்தைகளின் உணர்ச்சி வெளிப்பாட்டு முறைகள் பெரும்பாலும் அவர்களது வயது, மனத்திறன், பால் வித்தியாசம் குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை குழந்தையின் வளர்ச்சி சூழ்நிலை முதலியவற்றின் அடிப்படையிலேயே அமைகிறது.



குழந்தைகளின் மன உணர்ச்சிகள் சரியானபடி வெளிப்படமுடியாமல் கட்டுப்படுத்தி வைக்கப்பட்டால், அவர்களின் உள்மனம் பாதிக்கப்பட்டு ஆளுமைகளும் நசுக்கப்பட்டு மனோ வலிமை குன்றிய மற்றும் பொருத்தமற்ற ஆளுமைகளை வளர்த்துக்கொண்டு வளர்கிறார்கள். எனவே பெற்றோர் வளர்க்கும் விதத்தில்தான் நல்ல ஆளுமைகளைக் குழந்தைகள் வளர்த்துக்கொள்கின்றனர் என்பது உறுதி. ★

# வாழ்க்கை வாழ்வதற்கே

**கா**லம் என்பது பொன் போன்றது என்று சொல்வார்கள். அதனால் காலத்தை வீணடிக்கும் ஒவ்வொரு விநாடியும் எங்களுக்கு நஷ்டத்தையே நிச்சயம் கொண்டுவந்து விடும். இழந்து விட்ட காலத்தை எந்த சக்தியாலும் திரும்பப்பெற முடியாது என்பது எவரும் அறிந்த உண்மை. அதனால் கிடைக்கும் காலத்தை பயனுள்ள வகையில் கழித்து வெற்றி காண்பதே புத்திசாலித்தனமாகும்.

காலம் என்று சொல்லும்போது அதில் நேற்று இன்று நாளை என்ற மூன்றும் அடங்குகின்றன. நேற்று என்பது எங்களிடமிருந்து விடைபெற்றுவிட்டதாகும். நாளை என்பது சந்தேகமானது. நம் கண்முன்னே இருப்பதுதான் இன்றைய தினமாகும். இருக்கின்ற இன்றைய பொழுதுதான் எமது வாழ்க்கையின் முக்கிய கட்டமாகும். அதனால் இன்றைய பொழுதை மனித சமூகம் தவறவிடக்கூடாது. இன்று நாம் செய்த வேலைகளுக்கு பலனும், மதிப்பும் கிடைத்துவிடலாம்.

அதேபோல இன்றைய பொழுதைசிறப்பாகக் கழிப்பதால்தான் நாளைய பொழுது சிறப்பாக அமைந்துவிடலாம். அதனால் இன்றைய தினத்தை இனிமையாகக் கழித்துவிட முற்படுவது ஏமாற்றமாகாது. இன்றைய பொழுதை வீணாகக் கழித்தவர்கள் நாளைய பொழுதின்போது நேற்றைய தினத்தை நாம் வீணடித்துவிட்டோமே என்று மனம் வருந்துவதில் எந்தவித பயனுமில்லை.

இன்றைய தினத்தை பயன்படுத்தாமல் நாளை பார்த்துக்கொள்ளலாம் என்று கருதுபவர்கள் - வாழ்க்கையில் அடையவேண்டிய பல வெற்றிகளை இழந்து விடுகின்றனர். இன்று நாம் சிறப்புடன் வாழவேண்டும் என்ற எண்ணம் ஒவ்வொரு நாளும் இருப்பின், அவர்கள் எந்த நாளும் சிறப்புடன் வாழ்கிறார்கள் என்பதுதான் பொருள்.

தினமும் காலையில் விழித்தெழும்போது மனக் கசப்புடன் அல்லாது - ஆனந்தமாகவும், உற்சாகமாகவும் கடவுளை நினைத்தவராக அவரின் அருளை வேண்டியவராக நல்ல எண்ணங்களுடன் எழும்பவேண்டும். கடவுளின் அருளால் இன்றைய பொழுது தனக்கு வெற்றி நிறைந்த பொழுதாக அமையவேண்டும் என்ற பிரார்த்தனையுடன் எழும்பவேண்டும்.

இந்த மேலான வழக்கத்தை ஒவ்வொருவரும் மேற்கொள்ளவேண்டும். அதன்பின்னரே நாளாந்த அலுவல்களை ஆரம்பிக்கவேண்டும். நாட்கள் உருண்டோடுகின்றன.

இப்படியாகக் கழிந்துசெல்லும் ஒவ்வொரு நாளையும் எப்படிக் கழிக்கவேண்டும் என்பதை முதலில் நாம் திட்டமிட்டுக்கொள்ள வேண்டும். ஏனெனில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படாத எந்த செயல்களும் வெற்றிபெறும் என்பது சந்தேகமானது.

எங்களில் அதிகமானோர் இன்று நாம் செய்ய வேண்டிய வேலைகள் அதிகம் உள்ளன. அப்பப்பா... இத்தனை வேலைகளையும் நாம் எங்கே எப்போது, எப்படி செய்து முடிப்பது என்று தலையிலே கையை வைத்து சிந்திக்கின்றனர்.

இது அவர்களது மன உறுதியின் பலவீனத்தைக் காட்டுகிறது. அவ்வாறன்றி அதற்குப் பரிகாரமாக நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு வேலைகளையும் வரிசைப்படுத்திக் கொள்ளவேண்டும்.

இதன்படி எப்போது எதைச் செய்துவிட வேண்டும் என்று எண்ணுகிறோமோ அப்போதே அதைச் செய்து முடிக்கப் பழகிக்கொள்ளவேண்டும். கடவுளின் அருளால் எமது திட்டப்படி எமது வேலைகளைச் செய்து முடித்து விடலாம் என்ற நம்பிக்கையையும் எங்களில் வளர்க்கவேண்டும்.

இன்று சமூகத்திலே அதிகமானோர் இன்று நேரமில்லை. நாளை செய்வோம், பிறகு பார்ப்போம் என்றெல்லாம் சொல்லி நாட்களைக் கழித்து வருகின்றனர்.

இத்தகையவர்கள் முக்கியமான வேலைகளையெல்லாம் தள்ளிவிட்டு ஏதோவெல்லாம் செய்து வருகின்றனர்.

இவ்வாறானோர் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு நாட்களை இனிமையாக கழிக்க முற்படவேண்டும்.



ஒவ்வொரு நாளும் இரவு நித்திரைக்குச் செல்லும்போது நாம் இன்றைய தினத்தை நன்மையான விதத்தில் கழித்தோமா அல்லது கடவுளின் விருப்பங்களுக்கு மாற்றமான விதத்தில் செயற்பட்டோமா என்பது பற்றி சிறிது சிந்திக்கவேண்டும்.

ஏதும் தவறுகள், குற்றங்கள் ஏற்பட்டிருப்பின் அதற்காக வருந்தி கடவுளிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும். இப்படியாக ஒவ்வொரு பொழுதையும் நாம் பயன்தரும் விதமாகக் கழித்து கடவுளின் நல்லருளைப் பெற்றுக்கொள்வோம். ✤

# பிஞ்சு முகத்தில் தேடல்

பாயில் கிடக்கும் சின்னக் குழந்தையைப் பார்க்கிறேன். பால் போன்ற முகம். வண்டு போல கறுப்புக் கண். நல்ல கூர் மூக்கு. காலும் கையும் மரவள்ளிக் கிழங்கு போல. சின்னவிரல்களை இறுக்கிப் பொத்தியிருந்தது. இடைக்கிடை சைக்கில் விடுவது போல கால்களை உதைச்சுக் கொண்டு சிரிக்குது! நான் கிட்டப் போனன். படக்கெண்டு திரும்பி குப்புற விழுந்து தலையை நிமிர்த்தி என்னைப் பார்க்குது...! கையைப் பாயிலை போட்டு அடிக்குது பெரிய நீச்சல் வீரன் போல... எனக்கு அதுக்குக் கிட்டப் போகவேணும் போலிருந்துது. கலண்டர் படத்திலை வாற கண்ணன் போலக் கிடக்குது.



நான் கொஞ்சம் கிட்டப் போய் நிண்டன். அது வாயைத்திறந்து கண்ணைச் சிமிட்டிச் சிரிச்சுது! இரண்டு அரிசிப் பல்லு... ஐயோ! என்ன வடிவு.. என்னால் தாங்கமுடியவில்லை... நான் அந்தக் குழந்தையைத் தூக்கிக் கன்னத்திலை முத்தம் குடுத்தன். அது என்ரை காதிலை பிடிச்சுக் கொண்டு கன்னத்திலை திருப்பி எனக்கு முத்தம் தர என்ரை கன்னமெல்லாம் ஒரே எச்சில்!... ஆனால் பால் மணம்!... நான் குழந்தையை பாயில் படுக்கவைக்கவும் அதின்ரை அம்மா வரவும் நான் மெல்ல நகரத் தொடங்கினன்! ஆனால் குழந்தை என்ரை பாவாடைக் கரையைப் பிடிச்சுட்டுது நான் அப்படியே நிண்டு அந்த அம்மாவைப் பார்த் தன்.

கொஞ்சம் வயசான தோற்றம் ஈரச்சீலை! முகம் எல்லாம் அழுது வீங்கிக்கிடக்கு! பாக்கப் பாவமாகக் கிடக்குது. அவவின்ரை முகத்திலை ஏக்கம்!... நான் பாவாடையை விடுவிச்சுக் கொண்டு போக எத்தனிக்க... அந்த அம்மா எனக்கு கிட்ட வந்தா! பிள்ளை நீ தனியவே வந்தனி! அம்மாவின்ரை கேள்வி என்னை... நான் மூடிவச்சிருந்த சோகத்தை அவிட்டுவிட... எனக்கு அழுகை வெடிச்சுக் கொண்டு வந்தது. என்ரை கண்ணாலை வெள்ளம் போல கண்ணீர் வரத் தொடங்கியது.

அந்த அம்மா என்ரை கையை ஆதரவோடு பிடிச்சு. என்னை அணைச்சுப் பக்கத்திலை இருத்த. நான் அவவின்ரை மடியிலை விழுந்து ஐயோ!... அம்மா!... அப்பா! என்று கதறினேன். என்ரை முதுகிலை மழைத் துளிபோல அந்த அம்மாவின்ரை கண்ணீர்த்துளிகள் விழுந்து கொண்டிருந்தன. பிள்ளை அழாதை மேனை! அம்மாவின்ரை குரல் எனக்குக் கொஞ்சம் ஆறுதலாக இருந்தது. ஆனால் என்ரை நினைவு நேற்று நடந்த அந்த பிரளயத்திலே ஒன்றிவிட்டது.

நேற்றுக் காலை! ஞாயிற்றுக்கிழமை! எனக்குப் புலமைப்பரிசில் வகுப்பு ரியூசன் நான் அம்மா தந்த கோப்பியை வாங்கிக் குடிச்சுக் கொண்டிருந்தன். அப்பா முற்றத்திலை பேப்பர் படிச்சுக் கொண்டிருந்தார். அவற்றை வாயிலை சிகரெட்! அந்தப் புகை மேலே போய்க்கொண்டிருந்தது. எங்கடை வீட்டில போனமாதம் சித்தப்பா வெளிநாட்டிலை இருந்து பெரிய கோழி மணிக்கூடு 8 தரம் கூவியது. அம்மா என்ரை புத்தகப் பையைத் தோளிலே பக்குவமாகப் கொழுவி விட்டாள்.

சாப்பிடாமல் போறாய்!... ரியூசன் முடிச்சவுடனை வந்திட வேணும்! காலையிலை பட்டினி கிடக்கக்கூடாது... இண்டைக்குப் பாலப்பம்! நீ வந்த பிறகு சுடச்சுடச் சுட்டுத்தாறன்! அம்மா சொல்லிப் போட்டு என்னைப் பார்த்துச் சிரித்தார்.

அப்பாவும் எழும்பி வந்தார்! குஞ்சு நீ வந்தாப்பிறகுதான் நானும் சாப்பிடப் போறன்! என்ரை மனம் துள்ளியது. அம்மாவும், அப்பாவும் நான் தனிப் பிள்ளை எண்ட படியாலை செல்லமா வளர்க்கினம்.

எனக்கு அது ஒரு செருக்கு என்ரை சிநேகிதிமாருக்கு அது பொறாமை... 10 வயதாகிய எனக்கு அம்மா இப்பவும் சோறு தீத்திவிடுவா. சில வேளை அப்பாவுக்கும் தீத்திவிடுவா!

அப்பா கொழும்பிலை வேலை செய்யிறார். இப்ப 10 நாள் லீவிலை வந்து நிக்கிறார். அப்பா வந்தால் சமையல் விசேடம் தான். நேற்றுக் குழல் பிட்டு! இண்டைக்குப் பாலப்பம்! ரியூசனாலை வந்து ஒரு பிடி பிடிக்கவேணும். நான் நினைச்சுக்கொண்டே என்ரை சின்னச் சைக்கிளை எடுத்துக் கொண்டு றோட்டுக்கு வந்தன்.

அம்மாவும் அப்பாவும் வந்து சோடியாக நிண்டு கையைக் காட்ட... நான் ஒரு கணம் அவை இரண்டு பேரையும் பார்த்தன். நல்ல சோடியா இருந்தது. நான் சைக்கிளை விட்டிட்டு அவைக்குக் கிட்டப் போனன். அப்பா கேட்டார் என்ன குஞ்சு! என்னவும் மறந்துவிட்டிட்டியே! நான் சிரிச்சுக்கொண்டு சொன்னன்! இந்தச் சோடியைப் படம் பிடிக்கப் போறன்.!

நான் சிரிச்சுக் கொண்டே என்ரை கைகளை கமெரா போல பாவனை செய்து அதுக்குள்ளாலை அம்மாவையும் அப்பாவையும் பார்த்தன். நல்ல சந்தோஷமாகச் சிரிச்சுக் கொண்டிருந்தினம். நான் அந்தச் சோடியை என்ரை மனதிலை பதிச்சுக் கொண்டு சைக்கிலில் ஏறிக் காற்றாய்ப் பறந்தேன். எங்கள் வீட்டிற்குள் முன்னே இருந்த கடலைப் பார்த்தேன். நல்ல வடிவாய் நீலமாய் அமைதியாய் இருந்தது.

வகுப்பு முடியும் நேரம்! வாகனம் ஒண்டு வந்து நிண்டது. எங்களைக் கெதியா அதிலை ஏறச் சொல்லிச்சினம். என்னட்டைச் சைக்கிள் நிக்குது நான் சொன்னன். அந்த அண்ணா அதைக் கேளாமல் என்னைத் தூக்கி வாகனத்தில் ஏற்றினார். ரீச்சரும் ஏறிவிட்டா. வாகனம் விரைவாக எதிர்ப்பக்கமாக ஓடி அரை மணிக்குப் பிறகு ஒரு பெரிய பள்ளிக்கூடத்திலை நிண்டுது. அங்கை வெள்ளம் போலச் சனம் நிக்குது. என்ன நடந்தது- நாங்கள் எல்லோரும் இறங்கி ஓடினோம்.

ஏங்கடை சந்திக்கடைக்காரர் என்னைக் கண்டதும் ஓடி வந்தார். ஐயோ! உன்ரை அம்மாவையும் அப்பாவையும் கடல் கொண்டு போட்டுது.! என்ரை ராசாத்தி.. நீ தனிச்சுப் போனாயடி! நான் கூட்டத்துக்கை புகுந்து அம்மாவையும் அப்பாவையும் தேடினேன் ! காணவில்லை.!

இண்டைக்கு மூண்டு நாளாச்சு! ஒரு தகவலும் இல்லை. இந்த அம்மா தான் எனக்கு ஆதரவு தருகிறா! அவவின்ரை புருஷனும் 3 பிள்ளைகளும் கடலோடை போட்டினமாம்! அவவும் தேடுகிறா! நான் மெல்ல எழும்பினேன். ... ஒரு வாகனம் பெரிய சத்ததோடு வந்தது. எல்லாரும் ஓடிப்போச்சினம்.. ஏதோ நிவாரணப் பொருட் கள்! வாகனத்திலை இருந்து ஒரு காற்சட்டை போட்ட வெள்ளைக்காரி இறங்கி வந்தா! எல்லோரையும் வரிசையாக நிக்கச் சொன்னா. பிள்ளையின்ரை அம்மாவும் போனா!

அப்ப இன்னொரு வாகனம்... மணல் ஏத்துறது... வந்தது! எல்லாரும் நிவாரணத்தை விட்டிட்டு அங்கை ஓடிப் போச்சினம். அதிலை கதியால் அடுக்கினது போல செத்த உடல்கள் ! எனக்குத் தலை சுற்றியது. இப்ப நான் என்ன செய்யிறது! ... இதுக்கை அப்பாவும் அம்மாவும் கிடப்பினமோ? பாயிலை கிடந்த பிள்ளை அழத் தொடங்கியது. நான் அதைத் தூக்கினேன். உயிரோடு இருக்கிற இவளை விட்டிட்டு அந்த அம்மா மறந்து போனா. நான் எடுத்த படம் நினைவிற்கு வர பிள்ளையைத் தூக்கினன். இந்தப் பிள்ளையையும் சாக விடக்கூடாது. பாடசாலையை விட்டு மெதுவாக அவளைத் தோளில் சுமந்து கொண்டு வந்தன். ஒப்பாரி ஓலம் எனக்கு வேண்டாம். ✦

# கொடி கட்டிப் பறக்கும் ஆண் ஆதிக்கம்

ஒரு குடும்பத்தில் கணவன் ஆதிக்கம் செலுத்துகிறாரா அல்லது மனைவியின் அதிகாரம் கொடிகட்டிப் பறக்கிறதா என்று கேட்டால், எல்லோரும் கண்களை மூடிக் கொண்டு கணவன்தான் என்பார்கள்.



பெரும்பாலான குடும்பங்களில் கணவன்தான் சம்பாதிக்கின்றான். எனவே எந்த முடிவும் அவன்தான் எடுப்பான். மனைவி என்பவள் அவர் சொற்படி கேட்கும் ஒரு வேலைக்காரிமாதிரி என்று இதற்குக் காரணம் சொல்கிறார்கள்.

இது உண்மைதானா என்று கண்டறிய அண்மையில் ஒரு ஆராய்ச்சி செய்யப்பட்டது. இதில் வெளியான முடிவுகள் பலருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.



உண்மையில் பெரும்பாலான வீடுகளில் கணவன்தான் மனைவியை நம்பியிருப்பதாக இந்த ஆராய்ச்சியின் முடிவு தெரிவிக்கின்றது.

தேநீர் குடிப்பதிலிருந்து அலுவலகம் செல்வதற்கு அனுப்பி வைப்பது வரை அவரின் சகல விடயங்களிலும் மனைவியைச் சார்ந்தே இருக்கிறான் கணவன். அலுவலகம் முடிந்து வந்தபிறகு இதே நிலைதான்.

பிரசவத்துக்கோ, அல்லது குழந்தைகளின் விடுமுறைக்கோ மனைவி தன் பிறந்த வீடு சென்றுவிட்டால், தனியாளாக வீட்டிலிருந்து கணவன் படும்பாடு மிகவும் பரிதாபம்தான். பெண்டாட்டி இல்லாத வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா? என்று தனக்குள்ளே புலம்பித் திரிபவர்கள் கணவன்மார். ஆனாலும் இதை வெளியில் சொல்ல மாட்டார்கள் என்பது வேறு விடயம்.

(மிகுதி அடுத்த வாரம் தொடரும்)

# இரத்த சோகை



நம்முடைய இரத்தத்தில் சிவப்பணுக்களின் எண்ணிக்கை குறையும்போது இரத்தச்சோகை ஏற்படுகின்றது. இது இரும்புச் சத்துக் குறைவால் ஏற்படுகிறது. இரத்த சிவப்பணுக்களிலுள்ள ஈமோகுளோபினைத் தயாரிக்க இரும்புச்சத்து அவசியம். இரும்புச் சத்துக் குறைவால் ஈமோகுளோபினின் அளவு குறைகிறது.

இரத்தத்துக்குச் சிவப்பு நிறத்தைத் தரும் இந்தக் ஈமோகுளோபினின் முக்கியவேலை - உடல் உறுப்புக்கள் அனைத்துக்கும் பிராணவாயுவை எடுத்துச் செல்வதுதான்.

பொதுவாகப் பெண்களுக்கு மாதவிலக்கு, பிரசவம் போன்றவற்றால் இரத்த இழப்புக்கள் இருப்பதால் அன்மியா நோய் ஆண்களைவிடப் பெண்களையே அதிகம் தாக்குகிறது. அதிலும் குறிப்பாக மாதவிலக்குச் சுழற்சியுள்ள இளம் மற்றும் நடுத்தர வயதுடைய பெண்களே இந்த நோயால் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள்.

வசதி குறைவான பெண்களை இந்த நோய் அதிகம் தாக்குகிறது. கர்ப்பமடையும் பெண்களில் 50 வீதமான பெண்கள் இந்த நோயால் பாதிப்புக்குள்ளாகிறார்கள்.

இந்த நோய் நாம் உண்ணும் உணவிலுள்ள இரும்புச் சத்துக் குறைவால் ஏற்படுகின்றது. மலேரியாக் காய்ச்சலால் இரத்தச் சிவப்பணுக்களின் எண்ணிக்கை குறைகிறது. கொக்கிப்புழுத் தொற்றால் உறிஞ்சப்பட்டு இந்த நோய் ஏற்படுகின்றது.

இந்த நோயால் பாதிக்கப்பட்ட பெண்களின் உடல் வெளுத்திருக்கும், கண்களின் உட்புறம், நாக்கு, நகங்கள் வெளுத்துக் காணப்படும். எழுந்திருக்கும்போது தலைச் சுற்றுக் காணப்படும். மேலும் மூச்சு வாங்கும், இதயம் வேகமாக அடிக்கும். உடல் மிகவும் சோர்வாக இருக்கும்.

## இதனைத் தடுக்கும் முறை

இரும்புச்சத்து அதிகமுள்ள உணவுப் பொருட்களை உட்கொள்ள வேண்டும். கூடவே இந்த இரும்புச்சத்தைப் பெறக்கூடிய விற்றமின் ஏ மற்றம் சி அதிகமுள்ள உணவுகளையும் அதிகம் உட்கொள்ள வேண்டும். இரும்புச்சத்துக் குளிசைகளை வாங்கி உட்கொள்ளலாம். இந்தக் குளிசையால் வாந்தி ஏற்படலாம். சிலபேருக்கு வயிற்றில் எரிச்சல் ஏற்படலாம். மலம் கறுப்பாகப் போகலாம். ஆனால் இந்தப் பக்க விளைவுகள் சில நாட்களில் மறைந்துவிடும்.

கொக்கிப்புழுத் தொற்று, மலேரியா போன்றவற்றுக்கு உடனடியாகச் சிகிச்சை எடுக்க வேண்டும்.

அடிக்கடி கர்ப்பம் அடைவதைத் தவிர்க்கவேண்டும். இவை பெண்களை அதிகளவு இரத்தச் சோகைக்கு இட்டுச்செல்கின்றன. ✤

## கடற்கொந்தளிப்பு அனர்த்தத்தில் சிக்குண்டு

# கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்கள்!

**கடற்கொந்தளிப்பில் அகப்பட்டு காயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருவோர் பெயர் விபரம் வருமாறு:-**

எம்.ஜெயராஜ் (வயது 8) வெற்றிலைக்கேணி, வீ.வசீகரன் (வயது10) புதுக்குடியிருப்பு, அ.சந்திரசேகரம் (வயது45) மாமுனை, அ.மரியநாயகம் (வயது 54) வெற்றிலைக்கேணி, த.சிவபாலசிங்கம் (வயது 49) ஆழியவளை, தி.கரிகரன் (வயது 17) ஆளியவளை, ம.திருநாகசெல்வம் (வயது 50), ஆழியவளை, அ.கபிலன் (வயது 28) வண்ணாங்குளம் முல்லைத்தீவு. ர.ரஜீபன் (வயது 8) ஆழியவளை, வ.பஞ்சாட்சரம் (வயது 50) வெற்றிலைக்கேணி இரணைப்பாலை, அ.மரியரூபன், இரணைப்பாலை, சி.ஜயந்திரன் (வயது 31) உடுத்துறை, மா.லோகராசா (வயது 28) தாளையடி, ச.கொனான்டஸ் (வயது 5) கட்டைக்காடு, பு.வசந்தகுமார் (வயது 12) வத்திராயன், து.வசீகரன் (வயது 16) வத்தராயன்.

சிவபாலசிங்கம் (வயது 49) ஆழியவளை, அ.மரியம்பிள்ளை (வயது 41) வெற்றிலைக்கேணி, எஸ்.வேதாரணியம் (வயது 55) ஆழியவளை, வி.யூட் (வயது 22) இரணைப்பாலை, ம.காத்ரோ (வயது 15) கள்ளப்பாடு முல்லைத்தீவு, சி.கஙகாதரன் (வயது 27) கள்ளப்பாடு முல்லைத்தீவு, ஜெயக்குமார் (வயது 23) வெற்றிலைக்கேணி, எம்.நல்லதம்பி (வயது 57) உடுத்துறை, ஆர்.சிவராசா (வயது 17) களளப்பாடு முல்லைத்தீவு, ஆர்.சுந்தரலிங்கம் (வயது 33) மாமுனை, சி.மயில்வாகனம் (வயது 56) கள்ளப்பாடு - முல்லைத்தீவு, அ.அனிறு (வயது 24) வண்ணாங்குளம் முல்லைத்தீவு, கஜேந்திரன் (வயது 13) சுண்டிக்ககுளம், ம.செல்வன் (வயது26) உடுத்துறை, தே.முருகானந்தராஜா (வயது 34) வண்ணாங்குளம் முல்லைத்தீவு, விஜய் (வயது 26) அம்மன்குளம் முல்லைத்தீவு, எம்.மரியபாலன் (வயது 48), செ.இளையதம்பி (வயது 83) ஆளியவளை, செ.முருகேசு (வயது 56) உடுத்துறை, மா.இராச மாணிக்கம் (வயது 36) கள்ளப்பாடு முல்லைத்தீவு, சி.சிவகுமார் (வயது 24) வெற்றிலைக்கேணி, நவநேசன் (வயது 27), சு.யோகேஸ்வரன் (வயது23) தாளையடி, வே.வெற்றிவேலாயுதம் (வயது 43) உடுத்துறை, த.சுப்பிரமணியம் (வயது 67) உடுத்துறை, பே.ஆனந்தம் (வயது 65) உடுத்துறை, பொ.முருகுப்பிள்ளை (வயது 67) உடுத்துறை, சி.தம்பித்துரை (வயது 51) ஆழியவளை, வ.திருநாவுக்கரசு (வயது 52) வெற்றிலைக்கேணி, அ.வினோத் (வயது 12) மந்துவில், த.மனோராஜ் (வயது 41) அளம்பில், ரி.கஜேந்திரன் (வயது 26), அலோசியஸ் (வயது 46) முல்லைத்தீவு, மு.தங்கவேல் (வயது 55) உடுத்துறை, யோ.லோறன்ஸ் (வயது 35) வெற்றிலைக்கேணி, சி.ஜெயகாந்தன் (வயது 25)கள்ளப்பாடு முல்லைத்தீவு, எம்.அமலதாஸ் (வயது26) இரணைப்பாலை, மா.வடிவேலு (வயது 75), சா.சகாயநாதன் (வயது 40)கள்ளப்பாடு முல்லைத்தீவு, எம்.யோகானந்தன் (வயது 21) ஆழியவளை.

ஏ.குயின்ரன் (வயது 42) வெற்றிலைக்கேணி, சு.சிவராசா (வயது 24) வெற்றிலைக்கேணி, வி.கிருஸ்ணன் (வயது 46) ஆழியவளை, சி.நல்லதம்பி (வயது 54) தாளையடி, பகீரதன் (வயது24), மா.ஞானேஸவரன் (வயது15) மாமுனை, பி.பற்றிக் (வயது41) மன்னார், தே.எலியாஸ் (வயது74) கட்டைக்காடு, சந்திரசேகரன் (நெடுமாறன்) (வயது 23) ஆழியவளை, அ.பஸ்ரியான் (வயது 18) கட்டைக்காடு, வி.மகேந்திரன் (வயது 28) கட்டைக்காடு, ஆர்.சதீஸ்வரன் (வயது 27) தாளையடி, பாலகுமாரன் (வயது 34) ஆழியவளை, கி.ஜெயசாந்தினி (வயது 26) ஆழியவளை.

இ.ஜெயவீரசிங்கம் (வயது 45) ஆழியவளை, ஸ்ரெனிலன் கபிஸ்ரர் (வயது 23) கோயில்குளம் முல்லைத்தீவு, க.காந்தலிங்கம் (வயது 39) செல்வபுரம் முல்லைத்தீவு, சா.சான்ஸ் (வயது 18) கள்ளப்பாடு முல்லைத்தீவு, தி.நகுல்ராஜ் (வயது 12) தாளையடி, ரி.வசீதரன் (வயது 19) உடுத்துறை, த.புத்திசிகாமணி (வயது 25), உடுத்துறை, தி.சிவலிங்கம் (வயது 46) உடுத்துறை, அருள்ராஜ் (வயது 40) வட்டுவாகல், வெ.பெருமாள் (வயது61) மருதங்கேணி, த.அமிர்தலிங்கம் (வயது44) முல்லைத்தீவு, பி.சண்முகநாதன் (வயது 55) கள்ளப்பாடு, முல்லைத்தீவு, த.கிருபாலசிங்கம் (வயது 58) அளம்பில், ரி.கோபன் (வயது 18) மருதங்கேணி, இளையதம்பி (வயது 68) உடுத்துறை, வி.விஜிதன் (வயது 19) கள்ளப்பாடு முல்லைத்தீவு, மு.வைரன் (வயது 61) சிலாவத்தை முல்லைத்தீவு, பே.எட்மன்ராசா (வயது 34) மணற்காடு, ஆர்.சுமன் (வயது 18) முள்ளியவளை, மரியாம்பிள்ளை மேரிஜெயராணி (வயது 38) வெற்றிலைக்கேணி, அன்ரன் அனிற்றா (வயது 8) பேப்பாறப்பிட்டி நல்லதண்ணித்தொடுவாய், செல்லையா வசந்தாதேவி (வயது52) வண்ணாங்குளம் முல்லைத்தீவு, க.ஜெயரூபன் (வயது 18) முல்லைத்தீவு.

### குழந்தைகள் விடுதி

யோசப் கலிஸ்ரா (வயது 16) செம்பியன்பற்று, பி.யாழியா (வயது 8) செம்பியன்பற்று, ச.றொக்ஸன் (வயது 8) தாளையடி, பா.கிருசாயினி (வயது 8) தாளையடி, லூ.கீர்த்திகா (வயது 8) கட்டைக்காடு, தவராசதுரை ஜீவிகா (வயது 17) உடுத்துறை, ஜெயசாந்தன் ஜீவிதா (வயது 28) ஆழியவளை, ஜெயசாந்தன் ஜெயவினிதன் (வயது 3) ஆழியவளை, ஜெயசாந்தன் ஜெயவிஜிதன் (வயது 4) ஆழியவளை, புஸ்பராசா பத்மசிறி (வயது 22) ஆளியவளை, பாலகிருஷ்ணன் லூபிகா (வயது 15) குடாரப்பு, திருநாவுக்கரசு பரமேஸ்வரி (வயது 50) வெற்றிலைக்கேணி, சற்குணராசா நந்தா (வயது 6) வத்திராயன், அன்ரன் நந்தினி (வயது 35) முல்லைத்தீவு, மேரி நிமலரூபி (வயது 20) சுண்டிக்குளி, சுகிநிலா (வயது 3) சுண்டிக்குளி, விக்கினேஸ்வரன் சிவகுமாரி (வயது 30) சுண்டிக்குளி, ஜோன் பொஸ்கோ மேரிவிக்டோரியா (வயது 40) தாளையடி, மேரியூட் (வயது 1½) தாளையடி, ஜெயபாலன் பிரபுதேவா (வயது 9) தாளையடி, அ.மரியசாந்தி (வயது 41) கட்டைக்காடு, ம.சிலோஜனா (வயது 44) ஆழியவளை,

### பெண்கள் விடுதி

வே.செல்வபாக்கியம் (வயது 58) வேம்படி, இ.கலாவதி (வயது 38) வேம்படி, ம.தர்சிகா (வயது10) செந்தளிர் முல்லைத்தீவு, பா.தவமலர் (வயது 14) செந்தளிர் முல்லைத்தீவு, வே.மீனாம்மா (வயது 66) செந்தளிர் முல்லைத்தீவு, அ.வதசலா (வயது 24) வெற்றிலைக்கேணி, வெ.ஜேசுநாயகி (வயது 61) வெற்றிலைக்கேணி, ச.ஜெயமஞ்சுளா (வயது 27) உடுத்துறை, தியாகராஜா சிசலியா (வயது 48) கள்ளப்பாடு- முல்லைத்தீவு, அ.இராசமணி (வயது 48) கள்ளப்பாடு- முல்லைத்தீவு, அ.தனுசன் (வயது 1½) கட்டைக்காடு, அ.றோஸ்மலர் (வயது 40) கட்டைக்காடு, த.தங்கேஸ்வரி (வயது 36) மருதங்கேணி, த.மிருதுனா (வயது 10) மருதங்கேணி, த.யந்தினி (வயது 12) மருதங்கேணி, இ.இன்பமலர் (வயது 39) உடுத்துறை, வ.யசோதா (வயது 15) ஆழியவளை, திருநாவுக்கரசு சுசீலா (வயது 18) ஆளியவளை, தெய்வேந்திரம் சாந்தகுமாரி (வயது 24) வத்திராயன், வசீகரன் மேரிஜெனிற்றா (வயது 30) முல்லைத்தீவு, அருந்தவச்செல்வம் அம்பிகா (வயது 40) உடுத்துறை, சுப்பிரமணியம் வள்ளிப்பிள்ளை (வயது 85) வத்திராயன், கிருஷ்ணசாமி வேல் மல்லிகா (வயது 40) ஆளியவளை, செபஸ்தியாம்பிள்ளை ஜெசிந்தா (வயது 54) குடாரப்பு, நவனீதராசா சத்தியபாமா (வயது 28) உடுத்துறை, மாயாவு வள்ளிப்பிள்ளை (வயது 50) ஆழியவளை, சிவராசா யோகேஸ்வரி (வயது 49) ஆழியவளை, த.செல்லாச்சி (வயது 80) வெற்றிலைக்கேணி, கோவிந்தராசா லீலா (வயது 44) கள்ளப்பாடு - முல்லைத்தீவு, முத்துலிங்கம் கருணாவதி (வயது 42) முல்லைத்தீவு, காந்தரூபன் மேரி யாழினி (வயது 2½) கட்டைக்காடு, காந்தரூபன் தொழினிகிருஸா (வயது 44) கட்டைக்காடு, காந்தரூபன் வினுசுதன் (வயது 4) கட்டைக்காடு, ஆ.அப்பையாவதி (வயது 56) சுண்டிக்குளம், பா.அழகம்மா (வயது 62) மருதங்கேணி, பி.ஜானசி (வயது 26) செம்பியன்பற்று, செ.ரேணுகா (வயது 28) வண்ணாங்குளம்- முல்லைத்தீவு, பா.நாகமணி (வயது 47) வள்ளிபுனம் -முல்லைத்தீவு, ந.கண்ணகை (வயது 60) பேப்பாறப்பிட்டி, அ.வரதேஸ்வரி (வயது 29) முல்லைத்தீவு, இ.விக்டோரியா (வயது 48) வண்ணாங்குளம் -முல்லைத்தீவு, ந.காசியம்மா (வயது 70) பழங்குடியிருப்பு, இ.அழகம்மா (வயது 54) பேப்பாறப்பிட்டி, சி.கருணா (வயது 16) தீர்த்தக்கரை முல்லைத்தீவு, மு.சறோஜினி (வயது 32) கட்டைக்காடு, மு.வினோசினி (வயது 10) கட்டைக்காடு, ம.சந்தனம்மா (வயது 40) கட்டைக்காடு, கொஸ்பிஜியாய் (வயது 10) கட்டைக்காடு, செ.அஜந்தா (வயது 18) ஆளியவளை, த.வசந்தகுமாரி (வயது 44) ஆழியவளை, க.சந்திரவதனி (வயது 26) 155 ஆம் கட்டை- கிளிநொச்சி, கு.ஜெனி (வயது 46) மணல்குடியிருப்பு- முல்லைத்தீவு, பரமேஸ்வரி (வயது 50) உடுத்துறை, வதனி (வயது 25) கட்டைக்காடு, பொ.விஜயகுமாரி (வயது 42) ஆளியவளை, கிருஷ்ணமணி (வயது 53) ஆழியவளை, தர்மினி (வயது 22) வவுனியா, த.அனுசியா (வயது 19) உடுத்துறை, நா.சியாமளா (வயது 19) கிளிநொச்சி, இ.கயல்விழி (வயது 21) உடுத்துறை, மேரி ஞானமலர் (வயது 50) செம்பியன்பற்று, ஜே.லட்சியகலா (வயது 34) உடுத்துறை, ஆ.பெண்மணி (வயது 63) முல்லைத்தீவு, த.இந்திரலீலா (வயது 52) செம்பியன்பற்று, பி.உதய பவளம் (வயது 30) கள்ளப்பாடு, முல்லைத்தீவு, ஏ.ஜெனோராணி (வயது 38) வண்ணாங்குளம், முல்லைத்தீவு, கி.றெஜினா (வயது 38) வெற்றிலைக்கேணி, க.புஸ்பமலர் (வயது 30) தீர்த்தக்கரை, முல்லைத்தீவு, வ.தயாமுத்து (வயது 46) மாமுனை, தா.யோகமணி (வயது 60) வத்தராயன், பா.நாகமமா (வயது 47) வல்லிபுரம்.

## குழந்தைகளுக்குரிய மருந்துகளுக்கு வன்னியில் பெருமளவில் தட்டுப்பாடு!

கடற்கொந்தளிப்பால் உயிரிழந்தவர்களில் அநேகமானவர்கள் பெண்களும் சிறுவர்களுமேயாவர். நீருடன் இவர்கள் அள்ளுப்பட்டதாலும் மேலதிக நீரை குடித்ததன் காரணமாக மூச்சுத்திணறியுமே பெரும்பாலான உயிரிழப்புக்கள் சம்பவித்துள்ளன.

தப்பியவர்கள் பலருக்கு கடல் நீர்குடித்ததன்காரணமாக சுவாசத் தொற்றுநோய்கள் ஏற்பட்டு அவஸ்தைப்படுகின்றனர் என வவுனியா மாவட்ட பொதுவைத்தியசாலை அத்தியட்சகர் பி.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

குழந்தைகளுக்குரிய மருந்துகளுக்கு பெரியளவில் வன்னியில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அனைத்து குடிநீர் கிணறுகளும் அசுத்தப்பட்டுள்ளதால் நீரை சுத்திகரிக்கக் கூடிய குளோறின் பெருமளவில் தேவைப்படுகின்றது. மேலும் தொற்று நீக்கி மருந்துகளும் அவசியமாகத் தேவைப்படுகின்றது.

உயிர் இழப்புக்கள் நின்றுவிட்டாலும் இதனால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் மேலும் ஏற்படலாம். அதனால்தான் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட வேண்டும். இல்லையேல் மேலும் உயிரிழப்புகள் வரலாம் எனவும் அவர் தெரிவித்தார்.



சிம்மம்

## உங்களுக்கு புத்தாண்டு யோகம் எப்படி?

*சிம்மராசி அன்பர்களே!*

எதிலும் தனித்துவம் நிறைந்து காணப்படும் நீங்கள் சூரியனை ஆட்சி நாயகனாகக் கொண்டவர்கள். இதனால் வாழ்க்கையில் எப்பொழுதும் பிரகாசமாகவே காணப்படுவீர்கள். தங்களைவிடப் பெரிய மனிதர்களோடு எப்போதும் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்வீர்கள். உங்களுக்கு இந்த ஆண்டின் தொடக்கம் குருவின் பலத்தோடு மங்களகரமாகத் தொடங்குகிறது. தற்போது 2 ஆம் இடத்தில் இருக்கும் குரு பல்வேறு முன்னேற்றங்களைத் தந்துகொண்டிருக்கிறார். எந்தப் பிரச்சினையையும் முறியடித்து உங்களை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்கிறார்.

அத்தோடு கேது 3 ஆம் இடத்தில் நின்று பொருளாதாரத்தை வலுப்படுத்தி வருகிறார். சனிபகவான் தற்போது 11 ஆம் இடத்தில் இருப்பது மிகவும் உகந்தபலன்தான். என்றாலும் அவர் வக்கிரம் அடைந்திருப்பதால் தற்காலிகமாக அவரால் நன்மை தர முடியாதவராகியுள்ளார். மார்ச் மாதம் 24 ஆம் திகதி வக்கிரம் நிவர்த்தியானதும் அவரது நற்பலன்கள் தொடர்ந்தும் கிடைக்கும். ராகுவை எடுத்துக் கொண்டால் அவர் தற்போது 9 ஆம் இடத்தில் இருப்பது அவ்வளவு சிறப்பானது அல்ல. அவர் உங்கள் முயற்சிகளில் சிற்சில தடைகளை உண்டுபண்ணினாலும் அதை குரு முறியடித்து வெற்றிக்கு வழிவகுப்பார்.

இந்த நன்மைகள் யாவும் ஆண்டின் முற்பகுதியில் தொடர்ந்து நடக்கும். அதன்பின் கிரகப் பெயர்ச்சி காரணமாகப் பலன்கள் படிப்படியாக மாறத் தொடங்கும். பெப்ரவரி 28 ஆம் திகதி ராகு - கேது பெயர்ச்சி நடக்கிறது. தற்போது நன்மை தந்து கொண்டிருக்கும். கேது 2 ஆம் இடத்துக்கு வருகிறார். அதன் பின் அவரால் நன்மை தரமுடியாது. பகைவர்கள் வகையில் தொல்லைகள் தலைதூக்கலாம். அதே நாளில் ராகு 9 ஆம் இடத்தில் இருந்து 8 ஆம் இடத்துக்கு மாறுவார். அதுவும் சிறப்பான இடம் அல்ல. ஜூன் மாதம் 27 ஆம் திகதி சனிப் பெயர்ச்சி வருகிறது. அப்போது சனிபகவான் 12 ஆம் இடமான கடக ராசிக்கு வருகிறார். அதன்பின் சனியால் நன்மை தரமுடியாது. அவரால் சிற்சில தொல்லைகள் வரலாம். சனி பாதகமற்ற இடத்துக்குச் சென்றாலும், அவரது 7 ஆம் இடத்துப் பார்வை சிறப்பாக அமையும். அதன்மூலம் நல்ல பொருளாதார வளம் கிடைக்கும். செப்ரெம்பர் மாதம் சென்றாலும், அவரது 7 ஆம் இடத்துப்பார்வை சிறப்பாக அமையும். அதன்மூலம நல்ல பொருளாதார வளம் கிடைக்கும். செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதி குருப்பெயர்ச்சி நிகழ்கிறது. அதன்பின் குருபகவான் உங்கள் ராசிக்கு வருவதால் அவரால் நன்மை தரமுடியாது. ஆனாலும் அவரது பார்வைகள் அனைத்தும் சிறப்பானதாக அமையும். அதன்மூலம் பல்வேறு முன்னேற்றங்களைக் காணலாம்.

மேற்கண்ட நிலையில் இருந்து பார்க்கும்போது ஆண்டின் தொடக்கத்தில் முக்கிய கிரகங்கள் பெரும்பாலும் சாதகமாகவும் அதன்மூலம் நன்மைகளும் கிடைக்கும். பிற்பகுதியில் குரு, சனி ஆகியோரின் பார்வையால் நற்பலன்கள் கிடைக்கப் பெறலாம். அந்த வகையில் விரிவான பலன்களைக் காணலாம். ஆண்டின் தொடக்கம் மிகவும் சிறப்பாக இருக்கும் என்பதால் முக்கிய காரியங்களை ஆண்டின் ஆரம்பத்தில் தொடங்கி விடுவது நல்லது. காலம் தாழ்த்தினால் அது எதிர்பார்த்த பலனைத் தராது. செப்ரெம்பர் மாதத்துக்கு உங்கள் முயற்சிகளில் தடைகள் வரலாம். ஆனாலும் குருவின் பார்வை சிறப்பாக இருக்கும் என்பதால் எதையும் முறியடித்து வெற்றிகொள்ளலாம். ஜூன் மாதம்வரை பொருளாதார வளம் சிறப்பாக இருக்கும். தேவைகள் பூர்த்தியாகும்.

*குடும்பம்:*

குதூகலம் நீடிக்கும். சுப நிகழ்ச்சிகள் அனுகூலமாகும். தடைப்பட்டுவந்த திருமணம் கைகூடும். அதுவும் நல்ல வரனாக அமையும். சிலர் புதிய வீடு, வாகனம் போன்றவை வாங்கலாம். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். ஆண்டின் பிற்பகுதியில் சிலர் பொருட்களைக் களவு கொடுக்க நேரிடலாம். உறவினர்கள். மத்தியில் அனுகூலம் மறையும்.

*உத்தியோகம்:*

செப்ரெம்பர் மாதம்வரை மிகச் சாதகமான காலம் என்பதால் அதற்குள் தேவையானவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளுங்கள். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். பதவி உயர்வு, சம்பள உயர்வு வந்துசேரும். வேலையின்றி இருப்பவர்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்புண்டு.

*வியாபாரம்:*

சிறப்பாக நடக்கும். லாபம் அதிகரிக்கும். பகைவர்களின் தொல்லை இருக்குமிடம் தெரியாமல் போய்விடும். புதிய தொழில் அனுகூலத்தைத் தரும். வேலையின்றி இருப்பவர்கள் குறைந்த முதலீட்டில் ஆண்டின் தொடக்கத்திலேயே தொழிலைத் தொடங்கவேண்டும். ஜூன் மாதத்துக்குப் பின்னர் புதிய தொழில் வேண்டாம். செப்ரெம்பர் மாதத்துக்குப் பின்னர் பகைவர்களின் தொல்லைகள் தலைதூக்க ஆரம்பிக்கும்.

*பரிகாரம்:*

ஆண்டு முழுவதும் துர்க்கை வழிபாடு மிகவும் துணைநிற்கும். சிவன் கோயிலுக்கும் சென்று வாருங்கள். ஜூன் மாதத்தில் இருந்து சனிபகவானுக்கு அர்ச்சனை செய்யுங்கள். தண்டனை பெற்று முடிந்தால் திருநாளன்று சென்று வாருங்கள். செப்ரெம்பருக்குப் பின்னர் வியாழக்கிழமையும் தட்சிணாமூர்த்தியை வழிபட்டு வாருங்கள்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*எண்பத்தால் எய்தல் எளிதுஎன்ப யார்மாட்டும்*
*மாண்புடமை என்னும் வழக்கு.*

திருக்குறள்

# நமது நோக்கு

## பாதிக்கப்பட்டோரிடம் உள நலம்பேண கல்விச் சமூகம் முன்வர வேண்டும்

சுனாமி கடற் கொந்தளிப்பு அனர்த்தம் காரணமாக ஏற்பட்ட பேரிழப்புக்களுக்குள்ளான மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கான முயற்சிகள் பல்வேறு தரப்பினராலும் மிகத் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுவரும் இந்தவேளையில், அதற்கான உதவிகள் சர்வதேச மட்டத்திலும் வந்து குவியத் தொடங்கியுள்ளன.

இடர் கண்டு உடனுதவும் மனிதப்பண்பு பெருமளவுக்கு மக்களிடம் அதிகரித்துள்ளமையை வந்து குவியத் தொடங்கியுள்ள உதவிகள் வெளிப்படுத்துவதாக உள்ளது. இது நிறைவு தரும் விடயமாகும்.

இன, மத பேதமின்றி நிவாரணப் பணிகளில் சகலரப்பினரும் தாமாகவே முன்வந்து இயங்கிவருவதும், தங்களால் முடிந்த சகல உதவிகளையும் அர்ப்பணிப்புடன் செய்து கொண்டிருப்பதும், எல்லா இடங்களிலும் துயரம் கவிந்த முகத்துடனும், கனத்த இதயத்துடனும்கூட தமது கடமைப் பொறுப்புகளில் முனைப்புடன் இயங்குவதை உணர்த்துவதாகவும் உள்ளது.

இதேவேளை, உலகின் பல்வேறு பகுதிகளில் சிறுசிறு அளவுகளில் நேற்று புவியதிர்வு ஏற்பட்டதாகவரும் செய்திகளும், கடற்பிரதேசங்கள் மீண்டும் சுனாமி கடற் கொந்தளிப்பு ஏற்படக்கூடிய அபாயம் உள்ளதாகவும் வெளிவந்துகொண்டிருக்கும் உறுதிப்படுத்தப்படாத செய்திகளால் நாடெங்கும் அச்சமூட்டும் வகையிலான வதந்திகளும் பரவிக் கொண்டிருக்கின்றன.

இந்த வதந்திகளால் பீதி கொண்ட மக்களின் அவலம் நேற்றுக் காலையில் மீண்டும் பெருமளவில் காணப்பட்டது. இழப்புக்களால் நொந்து போயிருக்கும் மக்கள் மத்தியில் வதந்திகள் மூலம் பீதி ஏற்படுத்த முயல்வது அவர்களை மேலும் குழப்பத்தில் ஆழ்த்தி துன்பப்படுத்துவதாகவே அமையும். எனவே, பொறுப்பானவர்கள் இது விடயத்தில் அவதானமாகச் செயற்படுதல் அவசியமாகும்.

இதுஒருபுறமிருக்க சுனாமி கடற் கொந்தளிப்பால் பாதிப்புற்ற பிரதேசங்களின் நிலைமைகளைப் பார்வையிட நேற்றும் நேற்று முன்தினமும் பிரதமர், ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஆகியோர் வழமைபோன்று தங்களது சம்பிரதாய விஜயங்களை மேற்கொண்டதுடன், அரச அதிகாரிகளுடன் வழமைபோன்று கலந்துரையாடல்களை மேற்கொண்டு திரும்பியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்குவதும், அதற்கான ஒழுங்குபடுத்தல்களை மேற்கொள்வதும் நீண்ட திட்டத்தைக் கொண்டதாகும் எனவும் இதனை செயற்படுத்துவதிலேயே அரசு கவனம் கொண்டிருப்பதாகவும் - ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் நேற்று முன்தினம் யாழ். செயலகத்தில் கூறியமையானது அவசர நிவாரணப் பணிகளில் அரசு அக்கறை கொள்ளவில்லை என்ற சந்தேகத்தையே மக்களிடம் பரவலாக ஏற்படுத்தியது.

எனினும் நேற்று கிளிநொச்சியில் அரசியற்துறைப் பொறுப்பாளர் - விடுதலைப்புலிகள் மேற்கொள்ளும் நிவாரணப் பணிகளுக்கு அரசு முழு ஒத்துழைப்பையும் வழங்கும் என ஜனாதிபதி உறுதியளித்திருப்பதாக தெரிவித்துள்ளமையானது நம்பிக்கையூட்டும் விடயம் என்றே கூறவேண்டும்.

இதேவேளை, சர்வதேச சமூகமும், அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்களும் நிவாரணப் பணிகளில் புலிகளுடன் முழு அளவில் ஒத்துழைக்க ஒப்புக் கொண்டுள்ளமை குறித்தும் தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளமையானது பாதிக்கப்பட்ட மக்களின் இயல்பு வாழ்வை அவர்களுக்கு ஓரளவேனும் மீட்டுக் கொடுக்கும் பணிகளுக்கு நம்பிக்கை தரும் செய்தியாகும்.

பல்லாயிரக் கணக்கில் உயிரிழப்புக்களை, மில்லியன் கணக்கிலான உடமை இழப்புக்களை எதிர்கால வாழ்வு பற்றிய நம்பிக்கைகளை, விருப்புக்களை, அனைத்தையும் இழந்து ஒரு சூனிய வாழ்வை வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கு புனர்வாழ்வளிப்பதென்பது உடன் சாத்தியமாகக் கூடிய பணியல்ல. ஆனாலும், அவர்களுடைய வாழ்வை உறுதிசெய்ய அவர்கள் உளவியல் ரீதியாக அடைந்துள்ள பல்வேறுபட்ட தாக்கங்களில் இருந்தும் அவர்களை மீட்க உடனடியாகச் செய்ய வேண்டிய பணிகளை ஆராய்ந்து அவற்றை நடைமுறைப்படுத்துவது மிக மிக முக்கியமான விடயமாகும்.

இழப்புக்களால், அதிர்ச்சியால் - ஏனைய பன்முகப்பட்ட பாதிப்புகளால் நொந்து - நைந்து போயுள்ள மக்களின் மனோபலத்தை, நம்பிக்கையை ஏதிலியராகிவிட்டோமே என்ற அச்சத்தை நீக்கும் வகையில் - ஏற்படுத்த வேண்டியது இன்றைய எமது சமூகப் பொறுப்பாகியுமுள்ளது.

இந்தப் பணியில் எமது கல்விசார் சமூகத்தினரே பெரிதும் அக்கறை கொண்டு, மிகப் பெரிய மனிதாபிமானத்துடன், மிகப் பெரிய நிதானத்துடன் செயற்பட வேண்டியவர்களாகி உள்ளனர். புறவாழ்வை ஸ்திரப்படுத்த அவசர நிவாரணப்பணிகளும் அத்தியாவசிய உதவிகளும், ஏனைய பராமரிப்பு விடயங்களும் உதவும் என்பது உண்மையே!

ஆனால், உள்ளத்தளவில் உறுதியானவர்களாகி மீண்டும் இயல்புவாழ்வுக்கு நம்பிக்கையுடன் தயார்ப்படுத்த வைக்கும் பணியே மிகவும் அவசியமானதாகும்.

அதனை உரியமுறையில் திட்டமிட்டு ஆராய்ந்து ஏக காலத்தில் செயற்படுத்த அறிவுசார் கல்விச் சமூகம் தீவிரமாக இயங்கவேண்டும்.

# நாடும் நடப்பும்



செய்தி:- இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இயல்பு வாழ்வை மீட்டுக் கொடுக்க சர்வதேச சமூகம் முன்வரவேண்டும்.

### ஊர்சுற்றியார் பார்வையில்...

# பேரழிவும் ஒற்றுமையும் மிருகங்களின் அறிவும்

இடிக்கு மேல் இடி விழுந்த மாதிரி பூமி அதிர்வு பற்றிய செய்திகள் வந்து மக்களை மேலும் மேலும் பீதியடையச் செய்கின்றன.

இனிமேல் பெரிய தாக்குதல் எதுவும் வராது என்று சில பூகற்பவியலாளர்கள் சொல்வதாக சில பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்தன.

கடலோர வீடுகளில் தங்கியிருக்க வேண்டாமென்று வேறு சில நிபுணர்கள் சொல்வதாக வேறு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதேசமயம் மீண்டும் பூமி அதிர்வு பதியப்பட்டிருப்பதாக நேற்று நண்பகல் தொலைக்காட்சிச் செய்தியொன்று பயமுறுத்தியது.

தமிழர் தாயகத்தில் கரையோரப் பகுதிகளில் இன்னமும் சடலங்கள் மிதந்துவந்து கொண்டிருப்பதாகவும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

அடையாளம் காணமுடியாதபடி சடலங்கள் கிடைப்பதால் அவற்றை எடுத்து அடக்கம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

மீட்புப் பணியில் ஈடுபட்டிருப்பவர்கள் பெரும் அவலங்களுக்கிடையிலேயே தொண்டாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

மீட்புப் பணியில் ஈடுபடுவதற்கு மேலும் மேலும் தொண்டர்கள் தேவைப்படுகிறார்கள்.

இந்த நிலையில் வதந்திகளும் பெரிதாகப் பரவிக் கொண்டிருக்கின்றன. என்றாலும் மக்களை அவதானமாக இருக்கும்படி வானிலை அவதான நிலையம் அறிவித்திருப்பதாக நேற்று மதியம் வானொலிச் செய்தியொன்று எச்சரித்தது!

இயற்கையின் கொடும் சீற்றத்தினால் நாடே அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்நிலையில் வெளிநாட்டு உதவிகளும், இலங்கை அரசின் உதவிகளையும் எதிர்பார்த்துக் கொண்டிராமல் உடனடியாகவே தாயகத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிக்குச் சென்றவர்கள் விடுதலைப் புலிப் போராளிகளும், தொண்டர்களும், பொது மக்களும்தான். இன, மத, மொழி, பிரதேச வேறுபாடின்றி பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும்படி தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தமது விடுலைப் போராளிகளுக்குப் பணித்திருந்தார்.

இந்த இயற்கையன்னையின் அழிவில் இரத்த உறவுகளையும் அன்புக்குரியவர்களையும் பறிகொடுத்து ஆற்ற முடியாத துயரத்திலும் வேதனையிலும் துடிக்கின்ற எமது மக்களுக்கு எனது அன்பையும், ஆறுதலையும், ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன். அதுபோலவே தமிழ் பேசும் தாயகமண்ணிலும், தென்னிலங்கைக் கடலோரப் பகுதியிலும் தமது உற்றார் உறவினர்களைப் பறிகொடுத்து ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும் இஸ்லாமிய, சிங்கள சகோதரர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபம் உரித்தாகுக. என்று தேசியத் தலைவர் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தியாவில் தமிழ் நாட்டிலும் தென்கிழக்காசிய நாடுகளிலும் இந்த இயற்கைச் சீற்றத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காகவும் தலைவர் தமது கவலையைத் தெரிவித்திருக்கிறார்.

பாதிப்புற்ற மக்களுக்கு நம்பிக்கையூட்டுகின்ற வகையிலும் தாமாகவே முன்வந்து தாராளமாகவே உதவி வருகின்ற புலம்பெயர்ந்து வாழும் எமது உறவுகளுக்கு இந் நேரத்தில் எனது அனபையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எம்மக்களை இந்தப் பேரழிவிலிருந்து மீட்கத் தொடர்ந்தும் உதவவேண்டுமெனவும் அவர்களைக கேட்டுக் கொள்கின்றேன்.

அத்தோடு பாதிப்புற்றுள்ள எம்மக்களுக்குத் தாராளமாக உதவுமாறு உலக நாடுகளையும், ஐ.நா.வின் அமைப்புக்களையும் கேட்டுக் கொள்கிறேன் என்று தலைவர் பிரபாகரன் தமது செய்தியில் குறிப்பிட்டிருந்தார்.

தென்னிலங்கையில் முன்பு வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு அங்கு மக்கள் இன்னல்பட்டபோது தமிழர் தாயகத்திலிருந்து விடுதலைப் புலிப் போராளிகளை நிவாரண உதவிகளை நேரடியாகவே கொண்டு சென்று வழங்குமாறு பணித்தவர் தலைவர் பிரபாகரன்.

ஆனாலும், பிரபாகரனின் மனிதாபிமான உணர்வை அங்குள்ளோர் சரியாகப் புரிந்துகொள்வதில்லை. புரிந்து கொள்வதற்கு சிங்கள மேலாண்மை வாதிகளும் மேலாண்மை ஊடகங்களும் அனுமதிப்பதில்லை.

இப்பொழுது இயற்கை அன்னையின் சீற்றத்தினால் வடக்கு - கிழக்கு - தெற்கு - மேற்கு என இலங்கையின் நாற்றிசையையுமே பெரும் அழிவுக்கும் சோதனைக்கும் உள்ளாக்கியிருக்கிறது.

பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குவதற்கும், புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கும் தேசியமட்டக் குழுவில் விடுதலைப் புலிகளையும் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்திருக்கிறார்.

இந்த அழைப்பை ஜனாதிபதி விடுத்திருப்பாரேயானால் நாட்டிற்கு ஏற்பட்ட பெரும் சோதனையை எதிர்கொள்வதற்கு எடுக்கப்படும் நம்பிக்கையூட்டும் முதல் நடவடிக்கையாக எடுத்துக் கொள்ளலாம்.

உள்நாட்டிலும், வெளிநாடுகளிலிருந்தும் உதவிகள் வந்து குவிந்த வண்ணமிருக்கின்றன. தென்னிலங்கையில் நிவாரண உதவிகள் வந்துகுவிந்ததால் உதவியளிக்கும் படி கோரிக்கை விடுத்த ஒரு நிறுவனம் அவற்றை சேமித்து வைத்து விநியோகிப்பதற்கு இடமில்லாததால் அவற்றைத் தொடர்ந்து அனுப்பவேண்டாம் என்று கோரிக்கைவிடுத்துள்ளது.

நிவாரண உதவி சில இடங்களில் குவிந்தும் மற்றும் சில இடங்களில் கிடைக்காமலும் உள்ளன. தென்னிலங்கையில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அமைச்சர்களும், அதிகாரிகளும், வெளிநாட்டவர்களும் உடனடியாகச் சென்று பார்வையிடுவதற்கு வசதியும், வாய்ப்பும் அதிகம். கொழும்பில் இருந்து இந்தப்பகுதிகளுக்கு இலகுவில் சென்று திரும்பக்கூடியதாக உள்ளன.

ஆனால் வடக்கு கிழக்கு அதிலும் கிராமப்புறப் பகுதிகளுக்கு இலகுவில் சென்று பார்வையிட்டுத் திரும்பமுடியாது.

வடக்கு - கிழக்கு மிக மோசமாக பாதிக்கப்பட்டிருக்கிறதென்பதை நேரில் பார்த்துத் தான் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதில்லை. சரியான நிர்வாக அமைப்பில் வடக்குக் கிழக்கின் அவலநிலை கொழும்பிற்கு எட்டியிருக்க வேண்டும்.

தமிழர் தாயகத்தின் நிர்வாகம் அப்பகுதிமக்களிடம் இருந்தாலே அப்பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக உதவமுடியுமென்பதை விடுதலைப்புலிகள் உடன் சென்று உதவிவருவதுடன் தொடர்ந்தும் அதே பணியை செய்து வருவதிலிருந்து உணர்த்தியிருக்கிறார்கள்.

நாட்டில்ஏற்பட்டுள்ள வரலாறு காணாத பேரழிவின் பின்னரும் கூட, இலங்கையில் அரசியல் வேறுபாடுகளை மறந்து நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கு சந்திரிகாவும் ரணிலும் ஒன்றாகவே பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று பார்வையிடவேண்டுமென்று கோரிக்கை தென்னிலங்கையில் குரல் கொடுக்கப்படுகின்றது.

இப் பேரழிவின் பின்னாவது இலங்கையில் இனவேறுபாடுகள் நீங்குவதற்குவாய்ப்பேற்படுவதை சிங்கள மேலாணமை ஊடகங்கள் விடமாட்டாதுபோலவே தோன்றுகிறது.

நான் நேற்று முன்தினம் இயற்கைப் பேரழிவு பற்றி எழுதிய போது ஆயிரக்கணக்கில் மக்கள் கடலிலும் தரையிலும் கடல் அலைக்குப் பலியாகியிருக்கிறார்கள் மிருகங்கள் அதிகம் பாதிக்கப்பட்டதாகவோ, அவைநீரில் மிதந்து சென்றதாகவோ செய்திகள் எதுவும் வெளிவரவில்லையென்றும் குறிப்பிட்டிருந்தேன். இது உண்மையானால் இதற்கான காரணத்தைத் தெரிந்து யாராவது தெரிவித்தால் பயனுள்ளதாக இருக்குமென்றும் எழுதியிருந்தேன்.

கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில தினசரி ஒன்று நேற்று அதன் முதல்பக்கத்தில் "மிருகங்கள் எங்கே போயின?" என்று இரண்டு பந்தித் தலைப்பில் ஒரு செய்தி வெளியிட்டிருந்தது.

மூன்று கிலோ மீற்றர் (இரண்டுமைல்) உயரத்துக்கு எழுந்த இராட்சத அலை தென்னிலங்கையில் பாய்ந்து அழித்தபோது இலங்கையின் மிகப்பெரிய வனவிலங்குகளின் புகலிடமான யால என்ற இடத்தையும் தாக்கி இருக்கிறது. நுற்றுக்கணக்கான யானைகளுக்கும், சிறுத்தைகளுக்கும் புகலிடமான இந்த வனத்தில் ஒரு மிருகம்கூட மாண்டதாக தகவல் இல்லை. இது பெரும் விந்தை என்று வனவிலங்குப் பாதுகாப்பு உதவி இயக்குநர் செ.டி.இரத்தினாயக்கா தெரிவித்திருக்கிறார். ஒரு யானையும் இறக்கவில்லை. ஒருமுயல்கூடச் சாகவில்லை என்று கூறும் இரத்தினாயக்கா பேரழிவுஏற்படுவதை அவைகள் எப்படியோ மணந்து விடுகின்றன போலும் என்று கூறுகிறார்.இது விந்தைதான் மிருகங்களுக்கு ஆறாவது அறிவும் இருக்கிறதா?

# கடற் கொந்தளிப்பில் உயிரிழந்தவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை தேவையில்லை!

## வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் உத்தரவு

கடற்கொந்தளிப்பு காரணமாக உயிரிழந்தவர்களின் சடலங்களை உரியவர்களின் மூலம் அடையாளம் கண்டு அவர்களின் பெயர், வயது, முகவரி, அடையாளம் காட்டியவரின் பெயர் விபரங்களைப் பதிவு செய்து கொண்டு உடனடியாக உறவினர்கள் அல்லது உரியவர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள திடீர் மரண விசாரணை அதிகாரிகளுக்கு இந்த மாவட்டங்களின் நீதி நியாதிக்கத்துக்குப் பொறுப்பான வவுனியா மாவட்ட நீதிபதி எம். இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார்.

வவுனியா சிறுகுற்றப்பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி அல்பிரட் ஹெட்டியாராச்சி, வவுனியா பொது வைத்தியசாலையின் மருந்து அத்தியட்சகர் கலாநிதி பி.சத்தியலிங்கம், வவுனியா நகர திடீர்மரண விசாரணை அதிகாரி எஸ்.இராஜலிங்கம் ஆகியோருக்கு இந்த உத்தரவு நேற்று முன்தினம் வவுனியா நீதிமன்றத்தில் நீதிபதியால் நேரடியாக வழங்கப்பட்டது. வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள் ஊடாக இந்த உத்தரவு அந்தந்தப்பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரிகளுக்கு வழங்கப்படுவதற்காகக் கையளிக்கப்பட்டுள்ளது.

கடற்கொந்தளிப்பு காரணமாக பெரும் எண்ணிக்கையானவர்கள் உயிரிழந்துள்ளார்கள். அவர்கள் கடற்கொந்தளித்து நிலப்பகுதிக்குள் ஊடுருவியதால், நீரில் அடித்துச் செல்லப்பட்டு மூச்சுத்திணறி மரணமடைந்துள்ளார்கள். இந்த மரணங்கள் இயற்கை அனர்த்தம் காரணமாகவே ஏற்பட்டுள்ளது என்பது தெட்டத் தெளிவாகத் தெரிந்த விடயம். ஆகவே இவ்வாறு உயிரிழந்தவர்களின் சடலங்களை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தி, வாக்குமூலங்களைப் பதிந்து, இயற்கை அனர்த்தம் காரணமாக சோகத்தில் மூழ்கியுள்ள பொது மக்களின் சோகத்தை அதிகரிக்காமல், தாமதமின்றி சடலங்களை உரியவர்களிடம் கையளிக்க வேண்டும் என்றும் அந்த உத்தரவில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிக்கையில்-

சட்ட நடவடிக்கோவை 373 (I) பிரிவின்படி, உயிரிழந்த ஒருவரின் மரணம் குறித்த காரணம் தெளிவறறதாக இருந்தால், அதனை தெளிவுபடுத்திக் கொள்வதற்காக நீதிபதி அல்லது திடீர்மரண விசாரணை அதிகாரி மருத்துவ பரிசோதனைக்காக அரச வைத்தியர் ஒருவருக்கு உத்தரவிடலாம்.

எனவே இயற்கை அனர்த்தம் காரணமாக, நீரில் மூழ்கி மூச்சுத்திணறி மரணமடைந்தவர்கள் தொடர்பாக மருத்துவ பரிசோதனைக்கு உத்தரவிட்டு நேரத்தை வீணாக்காமலும், பெரும் எண்ணிக்கையானவர்கள் கடற்கொந்தளிப்பு காரணமாகக் காயமடைந்துள்ளவர்களைக் கவனித்துச் சிகிச்சையளிப்பதில் ஈடுபட்டுள்ள வைத்தியர்களின் நேரத்தை வீணடிக்காமல், விசாரணைகளை நடத்தி உடனடியாகச் சடலங்களை உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

இறந்தவர்களின் பெயர், வயது, முகவரி, ஆணா, பெண்ணா என்ற விபரங்களுடன் அடையாளம் காட்டியவரின் பெயர் விபரங்கள் என்பவற்றைப் பதிவு செய்து கொண்டு, உடனடியாக சடலங்களை ஒப்படைக்க வேண்டும். சட்ட நடவடிக்கை கோவை 370 (I) இன்படி, நீதிபதி அல்லது திடீர்மரண விசாரணை அதிகாரி, திடீர் மரணத்துக்கு உள்ளாகிய ஒருவரின் சடலத்தை வைத்தியசாலைக்குக் கொண்டு வரவேண்டும் என உத்தரவடாமல், சடலம் கிடக்கும் இடத்துக்கு அல்லது பாதுகாப்பான ஒரிடத்துக்கு அதனைக் கொண்டு வரச்செய்து, அங்கு சென்று விசாரணைகளை நடத்தி, சடலங்களை தாமதமின்றி ஒப்படைக்கமாறு அவர் தமது உத்தரவில் தெரிவித்தார்.

அடையாளம் காணப்பட முடியாத சடலங்களை, பின்னர் அடையாளம் காண்பதற்கு வசதியாக புகைப்படம் எடுப்பதுடன், விடியோ படம் எடுப்பதன் மூலம் பதிவு செய்து கொண்டு சடலங்களை கண்டெடுக்கப்பட்ட இடங்களில் அல்லது வசதியான இடங்களில் புதைபபதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடற்கொந்தளிப்பு காரணமாக உயிரிழந்தவர்களின் சடலங்கள் தொடர்பான விசாரணை அறிக்கைகளுடன் மருத்துவ பரிசோதனை செய்தமைக்கான மருத்துவ அறிகை, நீதிமன்றத்தால் கோரப்படமாட்டாது. வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நீதிபதியாகக் கடமையாற்றி வரும் அதிகாரத்துக்கமைய இந்த உத்தரவை இந்த மாவட்டங்களைச் சேர்ந்த திடீர் மரணவிசாரணை அதிகாரிகளுக்கு அத்துடன் கடல் கொந்தளிப்பு காரணமாக மரணமடைந்தவர்களின் சடலங்கள் தொடரபான மரண விசாரணை அறிக்கைகளை ஆறுதலாக அவசரமின்றி நீதி மன்றத்துக்கு சமர்ப்பிக்க முடியும் என்றும், இந்த மரணங்கள் தொடர்பான விசாரணைகளின் போது எழும் எத்தகைய சந்தேகம் தொடர்பாகவும் தன்னுடன் திடீர் மரண விசாரணை அதிகாரிகள் தொடர்பு கொள்ள முடியும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

இயற்கையின் சீற்றத்துக்கு உள்ளாகி, உறவுகளை இழநது பாதிக்கப்பட்டவர்களுக்கு திடீர் மரணங்கள் காரணமாக பின்னர் சட்டச் சிக்கல்களை ஏற்படுத்தாத வகையில் விபரங்களைப் பதிவு செய்து கொண்டு, மரணத்துக்கான காரணத்தைத் தெளிவாகக் குறிப்பிட்டு, உடனடியாக மரண அத்தாட்சிப்பத்திரங்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஊடகவியலாளர்களை தொடர்பு கொள்ள வேண்டுகோள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்கொந்தளிப்பின் காரணமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை உள்ளூர மற்றும் சர்வதேச ஊடகவியலாளர்களுக்குக் காண்பிப்பதற்கு, தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

கடற்கொந்தளிப்பால் முல்லைத்தீவு நகரமும், அதனை சுற்றியுள்ள 25 கரையோர கிராமங்களும் முற்றாகவே அழிக்கப்பட்டுள்ளன.

இந்த நகரத்தில் இருந்த கட்டடங்கள் அனைத்தும் நிர்மூலமாக்கப்பட்டுள்ளன. அழிவின் கோலத்தை சர்வதேச சமூகத்துக்கு ஊடகவியலாளர்கள் மூலமாகக் காண்பிக்க வேணடியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டுள்ளது.எனவே ஊடகவியலாளர்கள் கிளிநொச்சியிலு… தமிழர் புனர்வாழ்வுக்கழத்[illegible]டுக் தொடர்பு கொளளுமாறு [illegible] எடுத கொள்ளப்பட்டுள்ளார்.

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேரன் வாணிபத்தால் உதவிகள்

(முல்லைத்தீவு)

இயற்கையின் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேரன் வாணிபத்தினர் உலர்உணவு, பால்மா போன்ற பொருட்களை வழங்கி வருகின்றனர்.

ஒன்று தொடக்கம் இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு லக்டோஜன், ஓடிக்கொலோன், சவர்க்காரம், கௌவ் அண்ட் கோல்ட் பிஸ்கற், பாற்புட்டி போன்ற குழந்தைகளுக்குத் தேவையான பொருட்களையும், இரண்டு வயது தொடக்கம் பன்னிரண்டு வயதுவரையான ஒவ்வொரு குழந்தைகளுக்கு ஒரு அங்கர் பால்மா பெட்டிவீதமும் மற்றும் காயமடைந்த ஒவ்வொருவருக்கும் 1 அங்கர் பால்மா பெட்டி வீதமும் நேரில் சென்று வழங்கியுள்ளனர்.

இதுவரை புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம், றோமன்கத்தோலிக்க பாடசாலை, சுப்பிரமணியம் வித்தியாலயம், முல்லைத்தீவு அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம், இரணைப்பாலை ஆர்.சி, பளை மத்திய மகாவித்தியாலயம், கிளிநொச்சி பெண்கள் புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனம், முல்லைத்தீவு கலைமகள் மகா வித்தியாலயம், முல்லைத்தீவு சீ.சீ. பாடசாலை, கொக்குத்தொடுவாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, வற்றாப்பளை மகாவித்தியாலயம், முள்ளியவளை ஆர்.சி, முள்ளியவளை தமிழ் வித்தியாலயம், குமிழமுனை மகா வித்தியாலயம், தமிழ்க் கலவன் பாடசாலை, ஏ.பி.ரி ஆகிய இடங்களில் தங்கியுள்ள மக்களை சேரன் வாணிபத்தினர் நேரில்சென்று பார்வையிட்டு, பொருட்களை வழங்கியுள்ளனர்.



## முல்லைத்தீவுக்கு 5000 கிலோகிராம் குளோரின் உடனடியாகத் தேவை

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு உடனடியாக 5 ஆயிரம் கிலோகிராம் குளோரின் தேவைப்படுவதாக, முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரால் - வவுனியா அரச அதிபர் கே.கணேஷிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கடற்கொந்தளிப்பு காரணமாக இறந்தவர்களின் சடலங்களை தற்போது அகற்றுவதில் பெரும் சிரமம் ஏற்பட்டு இருப்பதாகவும், சடலங்கள் முற்றாக சேதமடைந்திருப்பதாகவும் சடலங்களை அகற்றி வருபவர்கள் தமது கைகளில் அணிவதற்கான கடினமான கைகவசத்தைப் பெற்றுத தருமாறும், கனரகவாகனம் ஒன்றையும் உடனடியாகப் பெற்று தருமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது இவ்வாறு இருக்க கடற்கொந்தளிப்பு காரணமாக, அடித்துச் செல்லப்பட்டுள்ள கால் நடைகளை அகற்றுவதில் பெரும் பிரச்சினைகள் இருப்பதாக, வவுனியா பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தி.கேதீஸ்வரன தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பெரும்பாலான கால்நடைகள் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. இவற்றையும உடனடியாகவே அகற்ற வேண்டும். இல்லையெனில் இத னாலும் அந்தப் பகுதி மக்களுக்கு நோய்கள் பரவக்கூடிய வாய்ப்பு உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

## வவுனியா தமிழர் புனர்வாழ்வுக் கழகம்தொடர்ந்தும் உதவி

இயற்கை அழிவு காரணமாக மன்னார் மாவட்டத்திலிருந்து வவுனியா மாவட்டத்தில் தஞ்சம் புகுந்துள்ள 400 இற்கும் மேற்பட்ட மக்களுக்கு பாடசாலைகளில் இருபபிட வசதிகளையும், சமைத்த உணவுகளையும், மற்றும் ஏனைய அத்தியாவசியத் தேவைகளையும் வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் தொடர்ந்தும் உதவிகளை செய்து வருகின்றனர்.

## புதுக்குடியிருப்பு அரசியற்துறைச் செயலகத்தில் தங்கியுள்ள மக்களை நாடாளுமன்ற உறுப்பினர்கள் பார்வையிட்டனர்

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு, புதுக்குடியிருப்பு அரசியற்துறைச் செயலகத்தில் தங்கியுள்ள மக்களை, முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைத் துணைப்பொறுப்பாளர் சின்னண்ணன் மற்றும் தமிழத் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பார்வையிட்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான - சதாசிவம் கனகரத்தினம், கஜேந்திரகுமார், ரவிராஜ், சிவாஜிலிங்கம், வினோநோதராதலிங்கம், கிஷோர், சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் வெள்ள அனர்த்தத்தால் பாதிகப்பட்ட மக்களை பார்வையிட்டு, அவர்களுடன் கலந்துரையாடி, தற்போதைய நிலைமை தொடர்பாக ஆராய்ந்து, நிவாரணப் பொருட்களை வழங்கினர்.

மேலும் நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரத்தினம் நலன்புரி நிலையங்களுக்கும் சென்று, வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களைப் பார்வையிட்டு தற்போதைய நிலைமை தொடர்பாக ஆராய்ந்தார்.

## இயற்கையின் சீற்றத்தில் இருந்து மீட்கப்பட்டு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் தங்கியுள்ளோர்

(கிளிநொச்சி)

இயற்கையின் சீற்றத்தால் முல்லைத்தீவு, வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் காயப்பட்டும், கிளிநொச்சி மத்திய கல்லூரியில் தங்கியுள்ளவர்களின் பெயர் விபரம் வருமாறு -

மு.மகேந்திராசா (வயது 56) ஆழியவளை, ஜெ.ஜெணந்த் (வயது 14) ஆழியவளை, நா.சிவரூபன் (வயது19) வெற்றிலைக்கேணி முள்ளியான், வே.சந்திர மோகன் (வயது28) வெற்றிலைக் கேணி முள்ளியான், வே.சுபத்திரை அம்மா (வயது53) வெற்றிலைக்கேணி முள்ளியான், கி.மேரிஜய்டா (வயது 34) கட்டைக்காடு முள்ளிய வளை, கொ.யோசப்மினா (வயது 60) கட்டைக்காடு முள்ளியான் , மோகனராசா குணசுந்தரி (வயது 24) ஆழியவளை, தமிழ்மாறன்மேனகா (வயது 24) ஆழியவளை, இளையதம்பி அன்னம்மா (வயது 62) ஆழியவளை, சுப்பிரமணியம் முகுந்தன் (வயது 22) கள்ளப்பாடு, மாதாகன்னிக்கோயில் உடுததுறை, தங்கவேலு மதிவதனன் (வயது 24) ஆழியவளை கொக்குளாய், ஜோர்ஜ் ந்சாறி (வயது 6) கட்டைக்காடு, (மரியாம்பிள்ளை வின்சன் கெனடி), பாலச்சந்திரன் தவமலர் (வயது 14) செந்தளிர் முல்லைத்தீவு, (பொன்னம்பலம் தவமலர்), புண்ணிய மூர்த்தி அன் னராணி (வயது 50) வெற்றிலைக்கேணி (மகேந்திரன் நேசிவர்ணன்), செ.சிவபாதம் (வயது 60) ஆழியவளை, இசிட்தாட்மர்னா (வயது 15) வெற்றிலைக்கேணி முள்ளியவளை, இசிட்தாட்கர்த்தேயன் (வயது 54)வெற்றிலைகேணி முள்ளியவளை, இசிட்தாட்மேரி சீத்தா (வயது 20) வெற்றிலைக்கேணி முள்ளியவளை, பஞ்சாட்சரம் ராகினி (வயது 13) உடுத்துறை வடக்கு , ந.சோதிலிங்கம் (வயது 23) வெற்றிலைக்கேணி, ந.சறோசல்லா (வயது49) வெற்றிலைக்கேணி, ஆறுமுகம் ராமச்சந்திரன் (வயது 50) ஆழியவளை, கணேசலிங்கம் பத்மகாந்தன் (வயது 21) ஆழியவளை, சந்திரசேகரம் சந்திரரூபன் (வயது 23) ஆழியவளை, ரணசிங்கம் சசிகுமார் (வயது 26) ஆழியவளை வத்திராயன், உதயகுமார் ரூபகரன் (வயது 15) ஆழியவளை தெற்கு, சிவபாலசிங்கம் சத்தியவரதன் (வயது 15) ஆழியவளை, செல்லையா சின்னத்தம்பி (வயது 65) வெற்றிலைக்கேணி, சின்னத்தம்பி மகேஸ்வரி, ஜெயபாலசின் னன் ஜெனார்த்தனன் (வயது 14) ஆழியவளை, சக்திவேல் உதயதர்சினி (வயது 32) ஆழியவளை, வைரமுத்து உதயராசா ஆழியவளை, வேலநாயகம் தங்கேஸ்வரன் (வயது 46) ஆழியவளை, ஜீவராசா சைலினி (வயது 46) முல்லைத்தீவு கள்ளப்பாடு, செல்வராசா ஜெயரஞ்சனா (வயது 18) முல்லைத்தீவு, கணபதிப்பிள்ளை மணிவண்ணன் (வயது 20)உடுத் துறை, கணபதிப்பிள்ளை கயல்விழி (வயது 08) உடுத்துறை, சுப்பிரமணியம் முகுந்தன் (வயது 22) கள்ளப்பாடு முல்லைதீவு, செலலத்துரை மனோகரன் (வயது 38) மருதங்கேணி, பஞ்சாட்சரம் மரியமனோகரி (வயது38) உடுத்துறை வடக்கு, செல்வகுமார் நவநீதன் (வயது13) வெற்றிலைக் கேணி, கிருஷ்ணன் சாந்தரூபன் (வயது 18) நாகரூபான் கோயில், இசிதோட்ராசன் (வயது 27) வெற்றிலைக்கேணி, பாலச்சந்திரன் சசிகரன் (வயது22) வத்திராய், தங்கவேலு காந்திமலர் (வயது 53) மருதங்கேணி வடக்கு தாளையடி, செல்லையா யோகராசா விசுவமடு, இளைய சிங்கம் சக்திவேல்(வயது33) ஆழியவளை, ஒப்பிலாமணி பரமேஸ்வரன் (வயது 27) வள்ளிபுரம் புதுககுடியிருப்பு, செல்வரத்தினம் விஜயகுமாரி (வயது 42) ஆழியவளை, இராஜகுலசிங்கம் தர்சினி (வயது 22) வண்ணாங்குளம் முல்லைத்தீவு, சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை (வயது 44) உடுத்துறை 4 ஆம் வட்டாரம், கணபதிப்பிள்ளை துரீஸ் (வயது 13) உடுத்துறை 4ஆம் வட்டாரம், பெருமாள் ஸ்ரீதரன் (வயது 25), சிவகுமார் புஸ்பராணி (வயது 30) ஆழியவளை, சின்ன முருகுப்பிள்ளை (வயது 77) வட்டுராயன், சின்னையா வேதநாயகம், (வயது 55) ஆழியவளை, கணபதிப்பிள்ளை பழனிநாதன் (வயது 32) வெற்றிலைக்கேணி, சி.தனிஸ் (வயது15) ஆழியவளை, பொ.செல்வரத்தினம் (வயது44) ஆழியவளை, மகேந்திரம்வஜிதா (வயது17) உடுத்துறை,ம.இந்திரா (வயது 40) உடுத்துறை, இ.மீனாட் சிப்பிள்ளை (வயது 56) ஆழியவளை

# சுனாமி பற்றிய எச்சரிக்கை; தமிழகத்தில் நேற்று பரபரப்பு

(சென்னை)

கடந்த ஞாயிறன்று சுனாமி அலைகளின் தாக்கத்தால் மக்கள் முழுமையாக இன்னமும் அதிர்ச்சியில் இருந்து மீளாத நிலையில் நேற்று மீண்டும் சுனாமி அலைதாக்கும் அபாயம் உள்ளதாக வெளியான தகவலும், கடல் கொந்தளிப்பும் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

...லை 10.50 மணி அளவில் இந்திய ... அரசிடமிருந்து தமிழக அரசுக்கு எச்சரிக்கை தகவல் அனுப்பப்பட்டது. ... அந்தமான் பகுதியில் தொடர்ந்து ...க்கம் நீடிப்பதால் கடலில் ராட்சத அலைகள் ஏற்பட்டுள்ளன. அந்த அலைகள் இன்று தமிழக கடலோரங்களை தாக்கும் என்று கூறப்பட்டிருந்தது.

நேற்று பிற்பகல் இந்தியக் கடலோர பகுதிகளை மிகப் பெரிய சுனாமி அலைகள் தாக்க வாய்ப்புள்ளது என்று உலகின் பல்வேறு நாட்டு நிபுணர்கள் எச்சரித்திருந்தனர்.

அவுஸ்ரேலிய கண்டம் அருகே மிகப் பெரிய நில நடுக்கம் ஏற்படலாம் என்று கணிக்கப்பட்டுள்ளது. எனவே இந்தியக் கடலில் சுனாமி அலைகள் தோன்ற வாய்ப்பு உள்ளது என்று அந்த நிபுணர்கள் விளக்கம் அளித்துள்ளனர்.

...ிய எச்சரிக்கை அறிவிப்பைத் தொடர்ந்து தமிழக அரசு உயர் அதிகாரிகள் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்தனர். கடலோர மாவட்ட அதிகாரிகளுக்கு எச்சரிக்கை தகவல் உடனே அனுப்பப்பட்டது.

எச்சரிக்கை அறிவிப்பைக் கேட்டதும் தமிழக கடலோரப் பகுதி மக்களிடையே பதட்டமும், பரபரப்பும் ஏற்பட்டது. கையில் கிடைத்ததை எடுத்துக் கொண்டு அனைவரும் ஓட்டம் பிடித்தனர். சில இடங்களில் சுனா... வந்து விட்டது என்று கூச்சலிட்டபடி ...ள் ஓடியதைக் காணமுடிந்தது.

ஏற்கனவே சுனாமி அலைகளால் பாதிக்கப்பட்ட பகுதியில்இருந்த மக்கள் புதிய எச்சரிக்கையை கேட்டு அதிர்ச்சியில் உறைந்தனர்.சென்னை கடலோரம் முழுக்க அதிகாரிகள் முகாமிட்டு மக்களை வெளியேற்றினார்கள்.

சுனாமி அலைகள் சென்னையை எந்த நேரத்திலும் தாக்கலாம் என்ற பரபரப்பு ஏற்பட்டதால் வருவாய்த்துறை அதிகாரிகள் முன் ஏற்பாடுகளுடன் தயார் நிலையில் இருந்தனர். அதுபோல சென்னையில் உள்ள சுமார் 10 ஆயிரம் பொலிஸாரும் கடலோரத்தில் குவிக்கப்பட்டனர்.

மெரீனா மற்றும் கடலோர பகுதிகளுக்கு செல்லும் அனைத்து வீதிகளையும் ொலிஸார் மூடினர். இதனால் கடலோரப் பகுதிகளில் உள்ள வீதிகளில் முற்றிலுமாக போக்குவரத்து நிறுத்தப்பட்டது.பஸ்கள் வேறு பாதைகளில் திருப்பிவிடப்பட்டன.

பொலிஸார் கடலோரசாலைகளில் அம்புலன்ஸ் மற்றும் தீயணைப்பு வண்டிகளுடன் தயார் நிலையில் வைக்கப்பட்டனர். தண்ணீர் சீறிவரும் பட்சத்தில் மக்களை காக்க தேவையான மீட்பு கருவிகளும் கடலோரங்களில் ஆங்காங்கே குவிக்கப்பட்டன.

சென்னை கடல் கொந்தளிப்புடன் காற்று வீசும் வேகமும் அதிகமாக இருந்தது. இது கடலோரபகுதி மக்களை மேலும் அச்சுறுத்தும் வகையில் இருந்தது.

அதிகாரிகளின் முன் எச்சரிக்கை ஏற்பாடுகள் காரணமாக சென்னை மக்களிடையே 11 மணிக்க ஏற்பட்ட பதட்டமும் பரபரப்பும் நீண்ட நேரம் நீடித்தது.

ஆனால் மதியம் 1 மணிவரை சென்னையில் கடல் கொந்தளிப்பு சிறிய அளவில் இருந்தே தவிர பெரிய அளவில் அலைகள் எதுவும் ஏற்படவில்லை.

சென்னை கடல் நேற்றுமதியம் கொந்தளித்தபடி இருந்தது. சில தடவை மட்டும் ராட்சத அலைகள் சிறிய அளவில் வந்து கரையில் மோதின.

சென்னை கடலோரத்தில் மதியம் திடீரென 3 அடி உயரத்துக்கு தண்ணீர் உயர்ந்தது. சிறிது நேரத்தில் அது குறைந்து விட்டது. எனவே ஆபத்து நீங்கி விட்டது என்று அதிகாரிகள் அறிவித்துள்ளனர். என்றாலும் கடற்கரையோரம் யாரும் செல்ல வேண்டாம் என்று எச்ரிக்கப்பட்டுள்ளது.

## அந்தமான் - நிக்கோபாரில் நேற்றும் தொடர் நில நடுக்கம்

சென்னையில் இருந்து 1190 கி.மீ தூரத்தில் உள்ள அந்தமான் நிக்கோபார் தீவுகளில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் தினமும் நிலநடுக்கம் ஏற்பட்டபடி உள்ளது.

முதல் நாள் ஞாயிற்றுக்கிழமை 9 தடவையும் மறுநாள் திங்கட்கிழமை 2 தடவையும் நில நடுக்கம் ஏற்பட்டது. நேற்றுமுன்தினம் காலை அந்த தீவுக் கூட்டங்களை 5 நிலநடுக்கங்கள் அதிர வைத்தன. இதனால் அந்தத் தீவுகளில் இருப்பவர்கள் உயிரைக் கையில் பிடித்தபடி உள்ளனர்.

நேற்று அதிகாலை நிக்கோபார் தீவுக் கூட்டங்களில் மீண்டும் ஏற்பட்ட நில நடுக்கம் மக்களை அதிர்ச்சியில் உறைய வைத்தது. நேற்று அதிகாலை 4.26 மணிக்கு சிறு நிக்கோபார் தீவின் கிழக்கு கடற்கரைப் பகுதியில் திடீர் நிலநடுக்கம் உண்டானது. 5.2 ரிக்ரர் அளவுக்கு பதிவான இந்த நில நடுக்கத்தால் மக்கள் மீண்டும் அலறி அடித்து ஓடினார்கள்.

இந்த அதிர்ச்சி நீங்குவதற்குள் அடுத்த 18 ஆவது நிமிடம் (அதிகாலை 4.45 மணிக்கு) பெரிய நிக்கோபார் தீவின் வட மேற்கு பகுதியை மையமாக வைத்து மீண்டும் ஒரு நிலநடுக்கம் ஏற்பட்டது. இதுவும் 5.2 ரிக்ரர் அளவுக்கு தாக்கத்தை ஏற்படுத்தியது.

அந்தமான், நிக்கோபார் தீவுகளில் கடந்த நான்கு தினங்களில் சுமார் 20 தடவை நில நடுக்கம் ஏற்பட்டுவிட்டது. நில நடுக்கத்தை தொடர்ந்து பூமிக்குள் உண்டாகும் சிறு சிறு நில அதிர்வுகள் சுமார் 100 தடவைக்கு மேல் நடந்துவிட்டது. நேற்று முன்தினம் மட்டும் 60 மேற்பட்ட நில அதிர்வு அந்தமான் மக்களை பீதிக்குள்ளாக்கியது.

நேற்று மதியம் வரை நில அதிர்வு விட்டுவிட்டு வந்தது. இதனால் அந்தமான், நிக்கோபார் தீவு மக்களிடையே பதற்றம் நீடித்தபடி உள்ளது. இதற்கிடையே நேற்றுக்காலை 2.43 மணிக்கு சுமாத்திரா தீவின் வடக்குப் பகுதியிலும் நேற்றுக்காலை 6.34 மணிக்கு இந்தோனேசியாவிலும் நில நடுக்கம் ஏற்பட்டது.

## 3 நாட்களாகத் தத்தளித்த சிறுமி கடலிலிருந்து மீட்பு!

ஆயிரக்கணக்கான உயிர்களை வாரிச் சுருட்டிக்கொண்ட "சுனாமி" இராட்சத அலையில் சிக்கிய 13 வயது சிறுமி 3 நாட்கள் கடலில் தத்தளித்த பின்னர் கரைஒதுங்கிய அதிசயம் இந்தியாவின் நிக்கோபார் பகுதியில் நடைபெற்றது.

அந்தமானில் கார்நிக்கோபார் தீவில் ...சித்துவந்த இந்திய விமானப்படை அதிகாரி சஞ்சீவராகவின் மகள் மாயா (வயது-13) வே அதிசயமாக மீட்கப்பட்டவராவார். சுனாமி தாக்குதலில் அவருடைய மாடி வீடு ...த்துச்செல்லப்பட்டது.

அதிகாரி சஞ்சீவ்ராகவும் அவருடைய ...னவியும் இதில் பலியாகிவிட்டனர். சிறுமி ...ாவின் கதி என்ன என்று தெரியாமல் ...ந்து வந்தது.

3 நாட்களாக கடலில் தத்தளித்து உயிருக்குப் போராடிய சிறுமி மாயாவை நேற்று முன்தினம் கடல் அலைகள் கரையில் ஒதுக்கித் தள்ளின. உடனடி சிகிச்சைக்கு பிறகு உயிர் பிழைத்துக்கொண்டதாக விமானப் படைத் தள மொண்டர் வி.வி.வந் தோபாத்யாயா நிருபர்களிடம் தெரிவித்தார்.

சிறுமி மாயா கடல் அடித்துச் சென்ற போது மரக்கதவின் உடைந்தபாகம் ஒன்றை இறுகப்பற்றிக்கொண்டாகவும் 3 நாட்களாக தண்ணீரில் தத்தளித்த மாயா நேற்றுமுன்தினம் கரைசேர்ந்ததாக தெரியவருகிறது. மரக்கட்டையில் மாயாவுக்கு துணையாக கடல் பாம்புகள் பயணம் செய்ததாகவும் என்றாலும் அவை மாயாவை தீண்டவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.



கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட கடற் கொந்தளிப்பினால் காரைநகர் கசூரினா கடற்கரையில் அமைந்துள்ள தீர்த்த மண்டபம் இடிந்த நிலையில் காணப்படுவதனைக் காணலாம். (52)

## ...ற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட ...4000 இற்கும் மேற்பட்டவர்கள் ...ன்னி நலன்புரி நிலையங்களில்

...டமராட்சி கிழக்கு மாமுனை, செம்பியன் ...ற்றும் தாளையடி உட்பட கரையோரப் ...ங்களைச் சேர்ந்த மக்கள் கடற்கொநத ... காரணமாக இடம்பெயர்ந்து பளை ... வன்னிப்பகுதிப் பாடசாலைகளில் ...கப்பட்டு வருகின்றனர். 14000 இற்கும் ... இடம்பெயர்ந்த மக்கள் 10 நலன்புரி ...களில் வைத்துப் பராமரிக்கப்படு...

...ற்றில் பளை மத்திய கல்லூரியில் ...குடும்பங்களும் புலோப்பளை பாட...ில் 244 குடும்பங்களும், தர்மக்கேணி ...லையில் 107 குடும்பங்களும், சோரன் ... பாடசாலையில் 382 குடும்பங்களும் ... வயல் பாடசாலையில் 72 குடும்பங்... இயக்கச்சிப் பாடசாலையில் 96 குடும்... தர்மபுரம் பாடசாலையில் 48 குடும்... விசுவமடுப் பாடசாலையில் 45 ...ம், கிளிநொச்சியில் 182 குடும்... ...நகரியில் 68 குடும்பங்களும்

...கான உதவிகள், நிவாரணப் ...ர் புனர்வாழ்வுக்கழகம் உட்பட பொது தொண்டுநிறுவனங்களும் செய்து வருகின்றன. இதேவேளை பளை மத்திய கல்லூரி நலன்புரி நிலையத்தில் வாழும் மக்கள் பெரும் நெருக்கடிகளையும், சுகாதாரப் பிரச்சினைகளையும் எதிர்நோக்கி வருவதாக வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் ஜெயசீலன் தெரிவித்தார்.

இங்கு 1895 குடும்பங்களைச் சேர்ந்த 5000 இற்கும் அதிகமானோர் இருப்பதால் மலசலகூட வசதிகள் மிகவும்நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளன. அத்துடன் நீர்ப்பிரச்சினையும் தோன்றியுள்ளது. மற்றும் சுகாதாரப் பிரச்சினைகளால் தொற்று நோய்கள் ஏற்படும் சாத்தியமுள்ளதாகவும் சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தி வருகின்றனர்.

இதேவேளை இந்தியாவைத் தொடர்ந்து இலங்கைக் கடற்பரப்பிலும் கடலனர்த்தம் ஏற்படலாமென தெரிவிக்கப்பட்டதையடுத்து வடமராட்சி கிழக்கு கரையோர மக்களும் வீடுகள், எஞ்சிய பொருட்களை மீட்கச் சென்றவர்கள், மீட்புப் பணிகளில் ஈடுபட்டோர் போன்றவர்கள் பாதுகாப்பான பிரதேசங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

## சுனாமியின் தாக்கத்திலிருந்து மிருகங்கள் தப்பிய அதிசயம்!

(கொழும்பு)

சுனாமி இராட்சதப் பேரலைகள் தாக்கியதில் இலங்கையில் முப்பதாயிரம் பேர் கொல்லப்பட்ட போதும் - காட்டுவிலங்குகள் அழிவிலிருந்து தப்பியிருப்பது குறித்து தேசிய வனவிலங்குத் திணைக்கள அதிகாரிகள் ஆச்சரியம் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கடற்கொந்தளிப்பினால் நாட்டின் கரையோரப் பிரதேசங்கள் பெரும் அழிவுகளுக்குட்பட்டன.

இதன்போது யால தேசிய வினவிலங்குப் பூங்காவும் அழிவிலிருந்து தப்பவில்லை பூங்காவுக்குள் சுமார் 2 கிலோமீற்றர் தூரத்திற்கு கடல் அலைகளின் வெள்ளம் ஏற்பட்டது.

இதன்போது யால தேசிய வனவிலங்கு பூங்காவில் நின்ற நூற்றுக்கும் மேற்பட்ட உள்நாட்டு வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளும் உயிரிழந்தனர்.

பெரும் அழிவுக்குட்பட்ட ...ப்பகுதியில் மீட்புப் பணிகள் இடம்பெற்று வருகின்ற போதும் அங்கு இறந்த மனிதஉடல்களை மட்டுமே காணமுடிகின்றது.

எந்த ஒரு காட்டு விலங்கினது சடலத்தையும் கண்டுபிடிக்க முடியவில்லை. யால தேசியப் பூங்காவில் நூற்றுக்கணக்கான யானைகள், சிறுத்தைகள், மான்கள் உட்பட ஆயிரக் கணக்கான மிருகங்கள் இருந்தன.

இருந்த போதும் ஒரு யானையோ, முயலைக்கூட இறந்தநிலையில் காணமுடியவில்லை. இது அதிகாரிகளுக்கு பெரும் ஆச்சரியத்தை தோற்றுவித்திருக்கிறது.

பூகம்பம் ஏற்பட்டு அழிவுகள் ஏற்படவுள்ளது குறித்து வனவிலங்குகளால் முன்கூட்டியே அனுமானிக்க முடிந்ததால் அவை தப்பி பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# உடனடி மனிதாபிமான உதவிகளை வழங்குவது குறித்து கலந்துரையாட

கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் ஆரம்பிக்கப்பட்ட உடனடி மனிதாபிமானப் பணிக்கான கருமபீடத்தில் நேற்றுமாலை 4 மணியளவில் யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தலைமையில், உள்ளூர், அரச, அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வெளிநாட்டு நிறுவனப் பிரதிநிதிகளுக்கிடையிலான சந்திப்பொன்று இடம்பெற்றது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களான பத்மினி சிதம்பரநாதன், சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் விடுதலைப்புலிகளின் வடமராட்சிக் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் தயா, தனியார் சிற்றூர்திச் சங்கப் பொறுப்பாளர் பாலையா, கடற்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் அருணன் ஆகியோரும் கெயார், போரூட், ஊற்று, கியூடெக், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகளுடன் அரச, அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், தமிழர் புனர்வாழ்வுக் கழக யாழ்.மாவட்டப் பணிப்பாளர் ஜெயராஜ், வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசப் பிரதிநிதிகள், மருத்துவ உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகள், தேசிய எழுச்சிப் பேரவையினர், உள்ளூராட்சி ஆணையாளர், பிரதேசசபைச் செயலர்கள், மாவட்ட வைத்திய அதிகாரி, ஆசிரியர்கள், சுகாதாரத் தொண்டர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இங்கு உரையாற்றிய இளம்பரிதி - மக்களுக்கு தற்போ... ஆற்றும் பணியினை மேலும் வி... டையச்செய்து சிறப்பான ...யில் தொடர்ந்தும் மக்களு... பணியைச் செய்யவேண்டு... தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மக்கள் மீ... தமது இடங்களுக்குத் திரும்பி த... அன்றாடப் பணிகளை ஆற்று... தற்கு அவர்களுக்கான ஏனை... வசதிகளையும் செய்யவே...மெனவும், இதுகுறித்து அடுத்... டச் சந்திப்பில் இவை ... கலந்துரையாடுவதென ... றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட மக்களு... உதவிகளை மேலும் முன்... துச் செல்வதெனவும், ... செயற்பாடுகளை மேலும் வி...தெனவும், தொண்டு நி...களும், சுகாதாரப் பிரிவினரு... வித்தனர்.



சுனாமி அலைகளால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு, வடமராட்சி கிழக்கு கரையோரப் பகுதிகளில் மீட்புப்படையணிகளை வழிநடத்துகிறார் கேணல் சூசை.

## அமெரிக்க...

இதற்கு இணைப்பாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் செயறபடும். 30 பேரடங்கிய குழுவில அமெரிக்க இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் கடற்படையின் விசேட பிரிவு வீரர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

## இன்று...

சேதத்தைக் கருத்திற்கொண்டு இன்றைய தினத்தை தேசிய துக்க தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தைச் சார்ந்த நிறுவனங்களில் இன்று தேசியக் கொடியை அரைக்கம்பத்தில் பறக்க விடுமாறு அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

## கிளிநொச்சி....

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சர்வதேச தொண்டர் அமைப்புப் பிரதிநிதிகள் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தக் கலந்துரையாடலில் கடற்பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு மேற்கொள்ளப்படவேண்டிய அவசர புனர்வாழ்வுப் பணிகள் பற்றியும், உதவிகள் பற்றியும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

## ஜே.வி.பியினரின்...

போதும் அனுமதியோம் இவர்களின் பொய்முகங்களை கிழித்தெறிந்து உண்மைத்தன்மையை உலகறியச் செய்வோம் என உரத்து கூடி இருந்த மக்கள் கோஷம் எழுப்பினர். இந்தப் போராட்டம் காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணி வரையும் நடைபெற்றது.

யாழ்.செயலகத்தின் முன்னால் இராணுவத்தினரும், பொலிஸாரும் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டபோதும் பொதுமக்களின் எதிர்ப்புக்கு முகம்கொடுக்க முடியாது ஜே.வி.பியினர் யாழ்ப்பாண செயலகத்திற்கு வருகைதரவில்லை.

## பார்வையிடுவதற்கு...

களும், பொது மக்களும் தம்மை மீட்டு உணவுப் பொருட்களை வழங்கிய நிலையில், நீங்கள் ஏன் தற்போது எம்மைப் பார்க்க வருகின்றீர்கள். இது உங்களது அரசியலுக்காக நீங்கள் செய்யும் ஒரு முயற்சியாகும்.

இவற்றைவிட எமது பாதிப்புக்கள் தொடர்பாக மாவட்ட அரசாங்க அதிபர் காலை மற்றும் மாலையில் உங்களுக்கு எமது விபரங்களை அனுப்பிக்கொண்டிருக்கிறார். இவ்வளவு விபரங்களையும் நீங்கள் அங்கிருந்து அறிந்து எமக்கான உதவிகளை வழங்காமல், ஏன் நேரில் பார்வையிட வந்தீர்கள் எனப் பாதிக்கப்பட்ட மக்கள் தமது எதிர்ப்பைக் கடுமையாகத் தெரிவித்தனர்.

இந்த நிலையில் அங்கிருந்து செல்லமுடியாத பிரதமரும, நான்கு அமைச்சர்களும் அங்கிருந்து அருகேயுள்ள இராணுவ முகாமிற்குச் சென்று படையினரின் பலத்த பாதுகாப்புடன் வரணி முகாமிற்குச் சென்று அங்கிருந்து ஹெலிகொப்டர் மூலம் பலாலிக்குச் சென்றனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன், நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே உட்பட மேலும் மூன்று அமைச்சர்களும் வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

(12) (122)

## அபாய எச்சரிக்கையால்...

இந்தியாவில் ஏற்பட்டுள்ள பாரிய அலையின் தாக்கம் சுனாமி அலையாக உருவெடுக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் எதுவும் இல்லை என்று இலங்கை கடற்படையின் நீரியல்வளம் தொடர்பான உயரதிகாரி கொமாண்டர் வை.எம். ஜயரத்ன தெரிவித்தார்.

இந்தியாவை அண்டியுள்ள கடற பகுதியில் இந்த அதிர்வுகள் உணரப்பட்டன. எனினும் இதனால் எந்த வித தாக்கமும் ஏற்படமாட்டாது என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை தற்போதைய நிலையில் மீண்டும் ஒரு பாரிய அலை இலங்கையில் தாக்கக்கூடிய அபாயம் எதுவும் இல்லை என்று பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.

அப்படி ஏதும் நடக்குமாயின் இலத்திரனியல் ஊடகமூலமாக மிகவும் விரைவாக பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவி... இந்த் நிலையைப் பயன்படுத்... குழப்பம் விளைவிப்பவர்களை உடனடியாகக் கைதுசெய்யுமாறு பொலிஸாரை அவர் பணித்துள்ளார். (14) (12)

## அவல நிலையிலிருந்து...

பிரதேசங்கள் பாரிய அழிவுகளை எதிர்நோககிய ஆரம்ப கட்டங்களிலே நாம் தனித்துநின்றே செயற்பட்டோம். எமது மக்களுக்கு உதவிகளை வழங்குவதற்காகவும் மற்றும் அடிக்கட்டுமான வசதிகளை ஏற்படுத்துவதற்காக வெளிநாடுகளில் உள்ள எமது நிபுணர்களை அழைததுள்ளோம. அவர்களுடன் இணைந்து எம் மக்களின் வாழ்வாதாரங்களைக் கட்டியெழுப்பவேண்டிய தேவை நமக்கு உண்டு. யுத்தத்தால் ஏற்பட்ட பேரழிவில் இருந்து விடுபடுவதற்கு எம்மக்கள் பிரயத்தனம் செய்கையில் இந்த அனர்த்தமானது எம்மக்களது வாழ்வியலில் பாரிய பின்னடைவினை ஏற்படுத்தி விட்டது.

எனவே இந்தப் பின்னடைவிலிருந்து எமது மக்களை மீட்டெடுக்கவேண்டிய கடப்பாடு நமக்கு உண்டு. எமது தேசத்தையும், மக்களையும் இந்த அவலத்திலிருந்து மீட்டெடுக்க சர்வதேச சமூகம் உதவிகளை வழங்க முன்வந்துள்ளமைக்கு எமது சோகத்தின் மத்தியிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். மனித அவலங்களினதும், நெருக்கடிகளின் மத்தியில் உள்ள எமக்கு இந்த அறிவிப்பு பலத்த நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை, எம்மால் மேற்கொள்ளப்படுகின்ற அவசர மனிதாபிமான வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக அரசாங்கமும், ஜனாதிபதியும் அறிவித்துள்ளமை எமக்கு மேலும் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் சர்வதேச சமூகம் எமக்குத் தொடர்ந்து ஆதரவளித்து எம்மக்களை இந்தத் துயரில் இருந்து மீட்டெடுப்பதற்கும், அவாகளது வாழ்வாதாரங்களை மீண்டும் உருவாக்கி இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவதற்கும் உதவ வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம் எனத் தெரிவித்தார்.

## துணைப்படை வீரர் வீரச்சாவு

(கிளிநொச்சி)

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். நாகர்கோவில் பகுதியில் கடமையில் இருந்தபோது இயற்கை அனர்த்தத்தில் சிக்கி தமிழீழத் தேசியத் துணைப்படை வீரர் ஒருவர் சாவடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

லெப்டினன்ட் சுந்தரமூர்த்தி (முத்தையா - சுந்தரமூர்த்தி, கண்டி, தற்போதைய முகவரி விசுவமடு குளத்தடி, பாரதிபுரம்) என்பவரே சாவடைந்தவராவார். இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்தியுள்ளனர்.

## மாணவர் பேரவையில் இலவச தொலைபேசி

கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்டவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதற்காக சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினர் இலவச தொலைபேசி அழைப்புக்களை வழங்கிவருகின்றனர்.

கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்டவர்கள் நாட்டின் எப்பகுதியில் இருந்தாலும் 4591886 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாக இலவசமாகத் தொடர்புகளை ஏற்படுத்தித் தகவல்களைப் பெற்றுக் கொள்ளமுடியும் என சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினர் தெரிவித்தனர்.

கற்சுமி கல்வி நிறுவனம்
166, நாவலர் வீதி, யாழ் நகர்
☆தரம் 6,7,8 ENGLISH MEDIUM வகுப்புக்கள் நடைபெறுகிறது.
☆தரம் 1 - O/L, A/L வரையான வகுப்புக்கள் நடைபெறுகிறது.
A/L-2007 (கலைப்பிரிவு)
ஆரம்பம் 02-01-2005
ஞாயிறு 9.30 AM.
☆தனிப்பட்ட அனுமதி வழங்கப்படும்.
☆தரம் 1- A/L வரை அனுமதிகள் ஜனவரி 15 வரை வழங்கப்படும்.
(1015)

## ஜனாதிபதி சந்திரிகா நேற்று திருகோணமலைக்கு விஜ...

(திருகோணமலை)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க திருகோணமலை உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி நலன்புரி நிலையத்துக்கு நேற்று விஜயம்செய்து அங்கு தங்கியுள்ள மக்களுடன் கலந்துரையாடினார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சுனாமி அலைகளின் தாக்குதலால் பாதிக்கப்பட்ட சுமார் 2500 தமிழ், சிங்கள மக்கள் உவர்மலை... கானந்தாக் கல்லூரியில் ...ருக்கின்றனர்.

இவர்களுடன் நேற்று ந... 12.50 மணியளவில் உ... ஜனாதிபதி சந்திரிகா, பா... பட்ட மக்கள் அனைவருக்கு... ரண உதவிகள் முழுமை... வழங்கப்படும் என்று உறுதி... துள்ளார்.

## திருமலைத் தள... சொர்ண... நகரப்பகுதியைப் பார்வையிட்டா...

### பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல்

திருகோணமலை மாவட்டத்தில் சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டு இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் நேற்றுப் பார்வையிட்டார்.

திருகோணமலை நகர்ப்பகுதி மற்றும் திருமலை வடக்குப் பகுதிக்கே கேணல் சொர்ணம் விஜயம் செய்தார். இவருடன் திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் மற்றும் துணை அரசியற்பொறுப்பாளர் ஐங்கரன் ஆகியோரும் சென்றிருந்தனர்.

இயற்கை அழிவுகளால் பாதிக்கப்பட்ட இடங்களான நிலாவெளி, குச்சவெளி, வேரவில் பகுதிகளையும் இவர்கள் பார்வையிட்டனர்.

## 13 407 பேர்...

களப்பு 94, திருகோணமலை 66, முல்லைத்தீவு 19, யாழ்ப்பாணம் 47, அம்பாறை 126.

இதேவேளை நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஏற்பட்டகடற்கொந்தளிப்புக்காரணமாக இறந்தோர் எண்ணிக்கை 27,263 ஆக உயர்ந்துள்ளதாக தேசிய அனர்த்த முகாமைத்துவ அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதேசமயம் 8,88,035 பேர் தமது இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்துள்ளதாகவும் தேசிய அனர்த்த முகாமைத்துவ அதிகார சபை தெரிவித்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் 10,436 பேரும், ஹம்பாந்தோட்டையில் 4,500 பேரும் காலியில் 3,724 பேரும் யாழ்.மாவட்டத்தில் 2,706 பே... மட்டக்களப்பில் 1,901 பேரும், ...லைத்தீவில் 1,700 பேரும் உ...ழந்துள்ளதாக தேசிய அ... முகாமைத்துவ அதிகாரசபை... துள்ள அறிக்கையில் தெ...கப்பட்டுள்ளது. இடம்பெயர்ந்... கள் 781 நலன்புரிநிலையங்க... தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

கடற்கொந்தளிப்பு காரண... 76,100 வீடுகள் முற்றாக அழி...பட்டுள்ளதுடன் 20,685 ... பாரிய சேதமடைந்துள்ளன...

இதுவரையில் 12,482 ... காயமடைந்து வைத்தியசாலை... அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் ... பேர் காணாமல் போயுள்ளத... தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணிநிலை வேண்டுமா...

1.பக்க வடிவமைப்பாளர்கள்
*Page Maker, Photoshop, Coral draw* தெரிந்தவர்க... தேவை.

2.கணினி தட்டெழுத்தாளர்கள்
திறமையாக Type செய்துகொள்ளக் கூடியவர்கள் தேவை... D.T.P. யில் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்க...

3.சிற்றூழியர்கள் - இயந்திர உதவியாளர்கள்
அலுவலகத்தில் சிற்றூழியராக பணியாற்ற நல்லொழுக்கமு...வர்கள் தேவைப்படுகின்றனர். அச்சு இயந்திரத்தில் உதவியாளர்க... பணியாற்ற ஆர்வமுள்ளவர்கள் தேவை.

மேற்குறிப்பிட்ட பணிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 03.0... காலை 10.00 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும்.

நிர்வாக இ...
நமது ஈழ...
267, நா...
யாழ்ப்பா...

(இ)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 31.12.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெ...